# அறம் வளர் இளந்தமிழ்

ஒளி : 1 க 15 - 9 - 92 சுடர் : 2 உ



உண்மையே கடவுள் என்று
உள்ளமது உறுதிகொண்டால்
திண்மையான கடமை உணர்வு
சிந்தனையில் உருவாகும்.

**சிறுவர்களுக்கான காலாண்டு சஞ்சிகை**

★

**விநாயகர் தரும நிதிய இலவச வெளியீடு**



—சிக்கனம் - சமத்துவம் - உடலுழைப்பு—

உ

சிவமயம்

## இதழினுள்ளே......


★ ஆத்திசூடி

★ நாணயம்

★ குறளின் கூற்று

★ விண்வெளி நகரம்

★ பறவைகள்

★ அணுகுண்டு அழிவுகள்

★ சுபாஸ் சந்திரபோஸ்

★ பாப்பா பாட்டு — 2

★ ஆதர் சீ கிளார்க்

★ பனையின் பயன்கள்

★ அறிவுப் போட்டி — 2


உ

சிவமயம்

## சமர்ப்பணம்



இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள் சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும் எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக்கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகின்றோம்.

—நிறுவனர்

விநாயகர் தரும நிதியம்

உ

# "அறம் வளர் இளந் தமிழ்"

## முகவுரை

கடந்த ஆடி மாதம் சிறுவர்களுக்கான "அறம் வளர் இளந் தமிழ்" என்னும் சஞ்சிகையை இலவசமாக வெளியிட்டிருந்தோம். இன்றைய சிறுவர்கள் நாளைய நாட்டின் தலைவர்கள் என்ற கருத்தை மதித்து சிறுவர்கள் மனதில் அறநெறிக் கருத்துக்களை விதைத்து — தியாக மனப்பான்மையையும் — தொழில் வளத்தையும் — மொழி ஆர்வத்தையும் அறுவடை செய்யும் எமது உண்மை நிலைப் பாட்டையும் வெளியிட்டிருந்தோம். எமது வேண்டுதலைப் புறக் கணிக்காது ஆண், பெண் வேறுபாடு இன்றி ஏராளமான மாணவ மணிகள் தங்கள் - தங்கள் ஆக்கங்களை அனுப்பி வைத்து எம் நெஞ்சங்களை நிறைத்துவிட்டார்கள். இளைய தலைமுறையின் வளமான எதிர்காலத்திற்கு பலமான — பயனான கருத்துக்களைத் தொடர்ந்தும் "அறம் வளர் இளந் தமிழ்" வெளியிட்டுக் கொண்டிருக்கும் என நம்புவோமாக.

அத்தோடு சென்ற இளந் தமிழ் கன்னி இதழின் முன்பக்கத்தில் நான்கு வரிக் கவிதை ஒன்றையும் வெளியிட்டு,

அறநினைவை எமக்களித்து ஒளி உணர்வை விதைப்பவனே
திறமுள்ள கருத்துக்களை இதயத்தில் பதிப்பவனே
மூச்சினில் நிறைந்தவனே முப்புரம் எரிப்பவனே
பேச்சினில் நிறைந்தெமக்கு பேரருள் புரிவாயே.

என்ற வேண்டுதலையும் வெளியிட்டிருந்தோம், நாம் வேண்டுதல்களை வேண்டியது வாயு பகவானையே ஆகும். கவிதையின் கருத்தை நோக்குவோமாகில் அறப்பணிகள் செய்வதற்கான எண்ணத்தை எமக்களித்து அதன் மூலம் உண்மை ஒளி உணர்வை எம் உள்ளத்தில் நிலை நிறுத்தியவனே — அறிஞர்கள் எல்லோராலும் மதித்துப் போற்றும் நயமான கருத்துக்களை எமதுள்ளத்தில் பரவச் செய்பவனே — நாம் சுவாசிக்கும் மூச்சினில் நிறைந்து எமக்கு உயிர் கொடுப்பதாகிய (வாயு பகவானே) காற்றே, எமது உள்ளத்தில் நிறைந்து நிற்கும் முப்புரங்களாகிய பொன் ஆசை — பெண் ஆசை — மண் ஆசை ஆகிய மூன்று ஆசைப்புரங்களையும் எரிப்பவனாகும். இவ்விடத்தில்

புராண வரலாற்றில் சிவபெருமான் விநாயகனை (காற்றை) வணங்காது முப்புரங்களை எரிக்கச் சென்று முடியாமல் போனதும் பின்னர் விநாயகனை (காற்றை) நினைத்து எரித்த சம்பவத்தையும் நினைவுபடுத்த விரும்புகின்றோம். காற்று இல்லாது நெருப்பு எரியாது என்ற கருத்தை உற்று நோக்கினால் எமது கவிதையின் கருத்தை உய்த்துணர்வதற்கு இலகுவாயிருக்கும். அப்பேர்ப்பட்ட பெருமைமிக்க வாயுபகவானே நாம் பேசும் கருத்துக்களை அடுத்தவருக்குச் சென்றடைய பெரும் துணைபுரிவாயே என்று வேண்டியுள்ளோம். இதனை வாசிக்கும்போது எமது உண்மை நிலைப்பாட்டை உணர்ந்துகொள்ள முடியும் என நம்புகிறோம்.

மேலும் அறநெறிக் கருத்துக்களை வளர்க்கும் நோக்கோடு பாடசாலை மட்டத்தில் 18-07-92-ல் அறநெறிப் பரீட்சை ஒன்றை நடாத்தி எதிர்வரும் நவராத்திரி தினத்தன்று பரிசில்கள் வழங்க எண்ணியுள்ளோம். இனிவரும் காலங்களில் பாடசாலை மூலம் அறநெறிப் பரீட்சையை நடாத்தும் எண்ணத்தைக் கைவிட்டு அறநெறிக் கருத்துக்களை ''அறம் வளர் இளந் தமிழ்' சஞ்சிகை மூலம் சிறுவர்கள் உள்ளத்தில் விதைக்க எண்ணியுள்ளோம். இதில் பிரசுரமாகும் அறநெறிக் கருத்துக்களைக் கற்றுணர்ந்து சிறுவர்களாகிய நீங்கள் உண்மையின் வழிநின்று செயற்பெற்று நாட்டின் நற்பிரசையாக வாழ்ந்து — அறநெறிப் பண்பாட்டை வளர்த்து — உங்கள் வளமான எதிர்காலத்தை நிலை நிறுத்த என்றும் ''அறம் வளர் இளந் தமிழ்" பாலமாக இருக்கும் என்று உறுதி கூறுகின்றோம்.

எமது நிதியத்தின் சிக்கனம், சமத்துவம், உடலுழைப்பு என்ற கோட்பாட்டில் உடலுழைப்பின் மகத்துவத்தை அனேகர் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. உடலுழைப்பு இன்றி எவரும் உயர்வடைந்ததாக சரித்திரம் கூறவில்லை. திருநாவுக்கரசர் — மாணிக்கவாசகர் — நளாயினி போன்ற அறநெறியாளர்கள், உடலுழைப்பு மூலமே இறைபதம் அடைந்துள்ளனர். எனவே சிறுவர்கள் அனைவருக்கும் உடலுழைப்பு மூலம் சுத்தமான காற்று சுவாசத்துக்குச் சென்று தெய்வீக நிலையை அடைய விநாயகனை (வாயுபகவானை) அருள்புரியுமாறு அன்புடனும், பண்புடனும், பணிவுடனும் இரு கரம் கூப்பி வேண்டுகிறோம்.

— நிறுவனர் —

உ

# அன்பார்ந்த ‘அறம் வளர் இளந் தமிழ்’ வாசக நெஞ்சங்களே!

அறம் வளர் இளந் தமிழ் சஞ்சிகை பற்றி உங்கள் கருத்துக்களுக்கும், ஆர்வத்திற்கும் எமது நன்றிகள் முதற் கண் உரித்தாகுக. அறநெறிச் சிந்தனைகளை இளம் சிறுவர்களிடையே பரப்பி அவர்களைத் தமிழ் ஈழத்தின் சிறந்த பிரசைகளாக உருவாக்கி ஒரு சிறந்த தமிழ்ச் சமுதாயத்தை தோற்றுவிக்க வேண்டுமென்பதே எமது அவா. இப்பணியில் இவ் இலவச சஞ்சிகையின் விநியோகம் எப்படித் தொடர வேண்டும் — சஞ்சிகையின் பயன் அனைத்து இளம் சிறுவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற வகையில் நாம் செயல் பெற வேண்டியவராய் உள்ளோம்.

மாணவர்களிடையே அறநெறிப் பண்புகளை வளர்க்கு முகமாக பாடசாலைகளிடையே அறநெறிப் போட்டிப் பரீட்சை ஒன்றினை இவ்வருடம் ஆடி மாதத்தில் நடாத்தியிருந்தோம். இத் தேர்வு எமக்கு பெரிய ஏமாற்றத்தைப் பெற்றுத் தந்தது. அதனடிப்படையில் எதிர்காலத்தில் அறநெறிப் போட்டிகளை ‘‘அறம் வளர் இளந் தமிழ்” சஞ்சிகையூடாக செயற்படுத்த எண்ணியுள்ளோம். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம் போன்ற அறநெறிக் குறள் மணிகள் இச்சஞ்சிகையில் தொடர்ந்து பிரசுரமாகி, இதற்கான வினாக்களும் பின் இப் பகுதியில் பிரசுரமாகும். இவ் வினாக்களுக்குரிய விடைகளை தங்களது சொந்த அறிவாலும், சொந்த கை எழுத்தாலும் எழுதி அனுப்பி வைக்கப்பெறல் வேண்டும். கூடிய மதிப்பெண்ணைப் பெறும் 7 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பெறும்.

எமது இந்நோக்கம் சரியாக நிறைவேற வேண்டுமாயின் அறம் வளர் இளந் தமிழ் சஞ்சிகை 9-ம் ஆண்டுக்குட்பட்ட ஒவ்வொரு மாணவ / மாணவிக்கும் கிடைக்கப்பெறல் வேண்டும். தமிழ் ஈழத்தில் மேற்குறிப்பிட்ட வகுப்புக்குட்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் இதைப் பதிப்பித்து வழங்குவதென்பது இயலாத ஒன்று என்பதை சகலரும் ஏற்றுக் கொள்வீர்கள். ஆகவே இதற்கான சில திட்டங்களை வகுத்து செயல்பெற விரும்புகிறோம். அவற்றை நீங்கள் பின்பற்றி இச் சஞ்சிலகயைப் பெற்று பயனடைவீர்களென நம்புகிறோம்.

(1) உங்கள் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளை எம்மோடு தொடர்பு கொள்ளச் செய்து உங்கள் பகு

திக்குத் தேவையான சஞ்சிகைப் பிரதிகளை பெற்று சுற்றுமுறையில் அனைவரும் பயன் பெறலாம். (இச் சஞ்சிகையினை வாசிக்க விரும்பும் உங்களைப் போன்ற சிறுவர்களின் பட்டியலொன்றை கிராம மட்டத்தில் தயாரித்து சனசமூக நிலைய நிர்வாகிகளிடம் கொடுக்கலாம்.)

(2) பாடசாலைகளில் உள்ள மாணவ / மாணவியர் மன்றங்கள் எம்மோடு தொடர்பு கொள்ளுமிடத்து அவர்களுக்கு அனுப்பி வைப்போம். விபரங்களை அனுப்பி வைக்கும்போது பாடசாலையின் பெயர், மாணவ மன்ற வகுப்பு, மாணவ மன்றத்தில் உள்ள மாணவ மாணவிகள் தொகை என்பவற்றைக் குறிப்பிடுதல் அவசியம்.

(3) நீங்கள் விரும்பினால் பாடசாலைகளில் ''அறம் வளர் இளந் தமிழ்'' வாசகர் வட்டம் என்னும் அமைப்பை உருவாக்கி செயல் பெறின் பொதுத் தேவையான சஞ்சிகைகளை அனுப்பி வைப்போம்.

(4) கிராம / நகரங்களில் உள்ள மக்கள் நலனை கருத்திற் கொண்டு செயல்பெறும் பொது அமைப்புக்கள் இருப்பின் அவற்றின் மூலமும் தொடர்பு கொண்டு ''அறம் வளர் இளந் தமிழ்'' சஞ்சிகையைப் பெற்று இளம் சிறுவர்களுக்கு வழங்கி உதவ முடியும்.

மேலும் தனியே சஞ்சிகையை பெற்று வாசியுங்கள் என்று மட்டும் நாம் கேட்கவில்லை, சஞ்சிகையின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகள் கருத்துக்கள் சிறுவர்களை நற்பிரசைகளாக உருவாக்கவல்ல அறநெறிக் கருத்துக்கள் கொண்ட கட்டுரைகள் கதைகள், துணுக்குகள், அறிஞரின் மணிமொழிகள் என்பனவற்றையும், அறிவியல் மொழி கலை, பண்பாடு, சிக்கன வாழ்க்கை முறைகள், உடலுழைப்பின் மூலம் பெறும் அனுபவ சிந்தனைகள், யப்பானியரைப்போல் சொந்த மொழியை வளர்த்து தன் கையே தனக்குதவி என்ற முறையில் விஞ்ஞான அறிவை வளர்த்தல், போன்ற துறைகளில் நல் ஆக்கங்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம். பிரசுரத்திற்குத் தகுதியானவற்றைப் பிரசுரிப்போம்.

அறநெறிகளை இளம் உள்ளங்களிடையே பரப்பவல்ல அறநெறிச் சொற்பொழிவுகளை கற்றறிந்தோர் மூலம் மாதாந்தம் ஒவ்வொரு சனசமூக நிலையத்திலும் நடாத்த எண்ணியுள்ளோம். இவ்விடயத்தில் சிரத்தையுள்ள சனசமூக நிலையங்கள் எம்மோடு தொடர்பு கொண்டு பயன்பெற முடியும்.

எனவே அறநெறியில் நாட்டமுள்ளோர் மேற்கூறிய விடயங்களை ஆராய்ந்து செயல்பெறுமாறு அன்போடும், பண்போடும், பணிவோடும் இருகரம் கூப்பி வேண்டுகின்றோம். உங்கள் ஊக்கமே எங்கள் உந்து சக்தி.

01-09-92 — நிறுவனர் —

உ

# ஔவையார் ஈந்த ஆத்திசூடி

1. அறம் செய்ய விரும்பு
தருமத்தைச் செய்வதற்கு ஆவலோடு இருப்பாயாக.

2. ஆறுவது சினம்
கோபத்தைத் தணிப்பதுதான் எமது முதற் கடமை.

3. இயல்வது கரவேல்
உன்னால் முடிந்ததை மறைப்பின்றிச் செய்.

4. ஈவது விலக்கேல்
தருமம் செய்வதை விலக்காதே.

5. உடையது விளம்பேல்
உன்னிடம் உள்ள செல்வங்களைப் பற்றி சொல்லித் திரியாதே.

6. ஊக்கமது கைவிடேல்
உனக்குப் பொருந்திய முயற்சியை வழுவவிடாதே.

7. எண்ணெழுத்து இகழேல்
கணித முறைகளையும் சொல் வசனங்களின் இயல்புகளையும் அறிவது அவசியம் இல்லை என இகழாதே.

8. ஏற்பது இகழ்ச்சி
உன்னால் முடிந்த தொழில் செய்து பெறும் வருமானத்தை விட்டு வேறுவகையில் இரத்தல் இழிவான செயல்.

9. ஐயமிட்டுண்
உனக்குள்ள பொருளில் வசதி குறைந்தவர்களுக்கு கொடுத்தபின் மிகுதியை அனுபவிப்பாயாக.

10. ஒப்புர வொழுகு
சமத்துவ நிலையை அனுசரித்து வாழ்வாயாக.

11. ஓதுவதொழியேல்
நன்மை பயக்கும் அறநெறி நூல்களை கிரமமாகப் படிப்பதை கைவிடாதே.

12. ஔவியம் பேசேல்
தகாத எண்ணத்தைக் கொடுக்கும் வார்த்தைகளைப் பேசாதே.

13. அஃகஞ் சுருக்கேல்
தானியத்தை விளைவிக்கும் நிலங்களை வேறு தேவை எண்ணி சுருக்காதே.

14. கண்டொன்று சொல்லேல்
கண்டதைவிட்டு வேறு உரைத்தல் ஆகாது. சத்தியம் தவறாதே.

15. ஙப்போல் வளை
'' ங '' எழுத்தைப்போல வளைந்து கொடுத்து பிறரை நேசித்து வாழ்வாயாக.

16. சனி நீராடு
சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து முழுகுவாயாக

17. நயம்பட உரை
பிறருக்கு உபயோகமான சொற்களைப் பேசுவாயாக.

18. இடம்பட வீடெடேல்
தகுதியை மீறி வீட்டை உண்டாக்காதே.

19. இணக்கமறிந் திணங்கு
உனக்கு பொருத்தமானவருடன் கூடி வாழ்வாயாக.

20. தந்தை தாய் பேண்

தந்தை தாயரை சகல துன்பங்களில் நின்றும் காப்பாற்றுவாயாக.

21. நன்றி மறவேல்

ஒருவர் செய்த நன்றியை எக்காலத்திலும் மறவாதே.

22. பருவத்தே பயிர் செய்

பயிருக்குரிய பக்குவ காலத்திலேயே பயிரைச் செய்வாயாக.

23. மன்று பறித் துண்ணேல்

நீதிமன்றுக்கு குறைகளை முறையிட வருபவர்களிடம் பொருள் கவர்ந்து சீவனம் செய்யாதே.

24. இயல்பலாதன செயேல்

சக்திக்கு மீறிய எக்கருமத்தையும் செய்யாதே.

25. அரவ மாட்டேல்

நச்சுத் தன்மையுள்ள பாம்புடன் விளையாடாதே.

26. இலவம் பஞ்சில் துயில்

இலவம் பஞ்சிலான மெத்தையில் படுத்துறங்கு.

27. வஞ்சகம் பேசேல்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாதே.

28. அழகலாதன செயேல்

கூடாத செயல்களில் ஈடுபடாதே.

29. இளமையிற் கல்

இளமைப் பருவத்தில் கருத்துடன் கல்வியைக் கற்பாயாக.

30. அறனை மறவேல்

தரும ஒழுக்கங்களை மறவாதே.

31. அனந்த லாடேல்
தூக்கத்தை அதிகமாகக் கொள்ளாதே.

32. கடிவது மற
சினம் கொள்வதை மறப்பாயாக.

33. காப்பது விரதம்
பிற உயிர்களைக் கொல்லாமல் காப்பதே உண்மை யான விரதம்.

34. கிழமைப் பட வாழ்
உன்னைச் சார்ந்தோரையும், முதியவர்களையும் பேணி வாழ்வாயாக.

35. கீழ்மை அகற்று
உன் தகுதிக்கு கீழ்மையான செயல்களை அகற்றி நடப்பாயாக.

36. குணமது கைவிடேல்
நற்குணத்தைக் கைவிடாதே.

37. கூடிப் பிரியேல்
நட்பு வைத்தபின் பிரியாதே.

38. கெடுப்பது ஒழி
பிறரைக் கெடுக்கும் எண்ணத்தை நீக்குவாயாக.

39. கேள்வி முயல்
அனுபவ அறிவினை முயன்று பெறுவாயாக.

40. கைவினை கரவேல்
உனக்குத் தெரிந்த கருமத்தை மறையாது பிறருக்கு கற்பிப்பாயாக.

41. கொள்ளை விரும்பேல்
பிறர் பொருளைக் கொள்ளையடித்து வாழும் வாழ்வை விரும்பாதே.

42. கோதாட் டொழி
சூதாடல் போன்ற விளையாட்டுக்களை விலக்கு.

43. கௌவை அகற்று
பழியான கருமங்கள் செய்தலை நீக்கி வாழ்வாயாக.

44. சக்கர நெறி நில்
அரச ஆணையின்படி ஒழுகு.

45. சான்றோர் இனத்திரு
சான்றோரின் கூட்டத்தில் மாறாது இருப்பாயாக.

46. சித்திரம் பேசேல்
உண்மைபோல் தோன்றும் கற்பனைப் பொய்களைப் பேசாதே.

47. சீர்மை மறவேல்
சிறப்பான செயல்களை ஆற்றுவாயாக.

48. சுளிக்கச் சொல்லேல்
பிறர் வருந்தக்கூடிய கொடிய வார்த்தைகளைப் பேசாதே.

49. சூது விரும்பேல்
சூதாடுதலை விரும்பாதே.

50. செய்வன திருந்தச் செய்
செய்யும் எக்காரியத்தையும் ஒழுங்காக திருத்தமாகச் செய்வாயாக.

51. சேரிடம் அறிந்து சேர்
நல்லோர்களைத் தெரிந்து அவர்களுடன் வாழ்வாயாக.

52. சையெனத் திரியேல்
பிறர் இகழும்படியாக அலைந்து திரியாதே.

53. சொற்சோர்வு படேல்
சொன்ன சொல்லை நிறைவேற்றுவதில் தளர்ச்சி காட்டாதே.

54. சோம்பித் திரியேல்
முயற்சி இன்றி சோம்பித் திரியாதே.

55. தக்கோ னெனத்திரி
சான்றோன் என பிறர் சொல்லும்படியாக நடந்து கொள்.

56. தானமது விரும்பு
தானம் வழங்குவதை விரும்புவாயாக.

57. திருமாலுக் கடிமை செய்
உனக்குள்ள தொழில் கடமையை மதித்து நட.
[ நாராயணனுக்குத் தொண்டு செய்வாயாக. ]
( நாராயணன் — தொழில் கடவுள் )

58. தீவினை யகற்று
பாவமான காரியத்தை தவிர்த்துவிடு.

59. துன்பத்திற்கு இடம் கொடேல்
மனக் கவலைக்கு இடமளியாதே.

60. தூக்கி வினை செய்
எக்கருமத்தையும் நன்றாய் ஆராய்ந்து செயற்பெறுவாயாக.

61. தெய்வ மிகழேல்
உண்மைப் பொருளான தெய்வத்தை இகழ்ந்து செயல் புரியாதே.

62. தேசத்தோ டொத்து வாழ்
நீ வாழுகின்ற கிராமத்து மக்களது நற்பழக்க வழக்கத்துடன் வாழ்வாயாக.

63. தையல் சொற் கேளேல்
அறிவீனமான பெண்களின் சொல்லுக்குச் செவிசாய்க்காதே.

64. தொன்மை மறவேல்
பழைய நன்னெறி மரபுகளை மறந்து ஒழுகாதே.

65. தோற்பன தொடரேல்
தோல்வி தரக்கூடிய விடயங்களில் தொடர்ந்து ஈடுபடாதே.

66. நன்மை கடைப்பிடி
எவருக்கும் நன்மை பயக்கும் விடயங்களைப் பின்பற்றி ஒழுகு.

67. நாடொப்பன செய்
நாட்டு மக்கள் கடைப்பிடிக்கும் நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவாயாக.

68. நிலையிற் பிரியேல்
எக்காலத்திலும் உயர்ந்த நிலையில் இருந்து நீங்கி வாழாதே.

69. நீர் விளையாடேல்
ஆழமான நீர் நிலைகளில் நீந்தி விளையாடாதே.

70. நுண்மை நுகரேல்
நோய் தரக்கூடிய சிற்றுண்டிகளை விரும்பாதே.

71. நூல் பல கல்
பல துறைகளிலும் அறிவைத் தரும் பலவகையான நூல்களையும் கற்பாயாக.

72. நெற்பயிர் விளை
உணவுக்கு முக்கியமான நெற்பயிரினை விளைவிப்பாயாக.

73. நேர்பட ஒழுகு
நேரிய வழியைக் கடைப்பிடித்து நடப்பாயாக.

74. நைவினை நணுகேல்
கெடுதலைத் தரும் விடயங்களை விலக்கி நடப்பாயாக.

75. நொய்ய உரையேல்
அற்பத்தனமான சொற்களைக் கூறாதே.

76. நோய்க்கு இடம் கொடேல்
உடல்நலத்தைப் பேணி நோய்க்கிடங் கொடாமல் நடந்து கொள்வாயாக.

77. பழிப்பன பகரேல்
பிறர் பழிக்கத்தக்க வார்த்தைகளைப் பேசாதே.

78. பாம்பொடு பழகேல்
பாம்பை ஒத்த தீயவருடன் பழகாதே.

79. பிழைபடச் சொல்லேல்
தவறு ஏற்படக்கூடிய சொற்களைப் பேசாதே.

80. பீடு பெற நில்
பெருமையைப் பெறத்தக்கவாறு நடந்து கொள்வாயாக.

81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
புகழுக்குரியவரைப் போற்றி வாழ்வாயாக.

82. பூமி திருத்தியுண்
சோம்பலின்றி ஊக்கத்துடன் நிலத்தைத் திருத்தி பயிரிட்டு உண்பாயாக.

83. பெரியோரைத் துணை கொள்
அனுபவம் மிக்கோரைத் துணைக்கொண்டு வாழ்வாயாக.

84. பேதமை அகற்று
அறிவாலும் அனுபவத்தாலும் உன்னிடமுள்ள அறிவின்மையைப் போக்கிக் கொள்வாயாக.

85. பையலோ டிணங்கேல்
சிறுகுணங் கொண்டவரோடு சேராதே.

86. பொருள்தனைப் போற்றி வாழ்
எப்பொருளாயிருந்தாலும் அப்பொருள்களைப் பேணிப் பாது காத்து வாழ்வாயாக.

87. போர்த் தொழில் புரியேல்
எவருடனும் சச்சரவில் ஈடுபடாதே.

88. மனந் தடுமாறேல்
இடையூறு வந்த இடத்தும் மன உறுதியுடன் கருமத்தை ஆற்றுவாயாக.

89. மாற்றானுக் கிடங்கொடேல்
பகைவனுக்கு இடமளிக்கக்கூடிய காரியத்தைச் செய்யாதே.

90. மிகைப்படச் சொல்லேல்
அளவுக்கதிகமான சொற்களைப் பேசாதே.

91. மீதூண் விரும்பேல்
அளவுக்கதிகமான உணவை விரும்பாதே.

92. முனை முகத்து நில்லேல்
போர் முனையில் முன்னுக்கு நிற்காதே.

93. மூர்க்கரோ டிணங்கேல்
முரடரோடு நட்பு வையாதே.

94. மெல்லினில்லாள் தோள் சேர்
மென்மையான உன் மனைவியிடம் அன்பாய் நடப்பாயாக.

95. மேன் மக்கள் சொற்கேள்
சான்றோரின் சொற்களைக் கேட்டு நடப்பாயாக.

96. மொழிவு தற மொழி
நீ சொல்ல வேண்டியதை தெளிவாக விளக்கிக் கூறுவாயாக.

97. மோகத்தை முனி
கீழான ஆசைகளை நீக்குவாயாக.

98. வல்லமை பேசேல்
உனது சொந்த வல்லமையை எடுத்துக் கூறாதே.

99. வாதுமுற் கூறேல்
குதர்க்கமான வார்த்தைகளைப் பெரியோர்முன் கூறாதே.

100. வித்தை விரும்பு
கல்வியை மனவிருப்பத்துடன் கற்பாயாக.

101. வீடு பெற நில்
மோட்சத்தை அடைவதற்குரிய ஞான வழிகளில் தளராது நிற்பாயாக.

102. உத்தமனாய் இரு
எல்லாருக்கும் நல்லவனாய் வாழ்வாயாக.

103. ஊருடன் கூடி வாழ்
நீ வாழும் ஊர் மக்களோடு ஒற்றுமையாக வாழ்வாயாக.

104. வெட்டெனப் பேசேல்
பிறர் புண்படும் வார்த்தைகளைப் பேசாதே.

105. வேண்டி வினை செயேல்
உனது நலனை மட்டும் கருதி செயல் புரியாதே.

106. வைகறைத் துயிலெழு
அதிகாலைப் பொழுதில் துயில் எழுவாயாக.

107. ஒன்னாரைத் தேறல்
உன் பகைவரை உணர்ந்து நடந்து கொள்வாயாக.

108. ஓரம் சொல்லேல்
யாராயிருந்தாலும் பாரபட்சமின்றி நியாயத்தை எடுத்து உரைப்பாயாக.

★ உபதேசங்களில் எறும்பு செய்யும் உபதேசமே சிறந்தது என்பேன். காரணம், அது உழைப்பைத் தவிர, வேறு எதையும் செய்வதில்லை.

—பெஞ்சமின் பிராங்லின்—

★ பசியிருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட, மீனைப் பிடிக்கக் கற்றுக்கொடுப்பதே சிறந்தது.

—சீனப் பழமொழி—

# நாணயம்

கண்ணன் கிழவி கொடுத்த நாணயத்தைப் பார்த்தான். இரண்டு ரூபாய் நாணயம்தான். தான் வாங்கிய சாமான் கணக்குப் போக மீதி ஒரு ரூபாய்க்குப் பதிலாக இரண்டு ரூபாய் நாணயத்தைக் கொடுத்தாள்.

பாட்டி இதுவந்து......... என்று அவளிடம் விபரம் சொல்ல கண்ணன் முயன்றபோது காய்கறி வாங்க வந்த கூட்டம் நெருக்கியடித்தது. அந்த நெரிசலில் இவன் பேசியதைக் கேட்க கிழவிக்குப் பொறுமையில்லை. ''மிச்சம் வாங்கியாச்சுத் தானே போய்ச் சேரு தம்பி'' அவனை விரட்டினாள் கிழவி. இப்போது என்ன செய்வது? நிச்சயம் கிழவி கவனிக்காமல்தான் கொடுத்திருக்கிறாள். பாவம் அவளுக்கு இன்று ஒரு ரூபாய் நட்டம். கண்ணன் மனம் மிகவும் கவலை கொண்டது. என்ன இருந்தாலும் இந்தப் பணத்தை எப்படியும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று நினைத்தவனாய் கண்ணன் ஆறுதலாக நின்றான்.

பத்து நிமிடத்துக்கு மேல் காத்திருந்தாலும் கிழவிக்கு ஓய்ச்சலில்லை. இப்போது வீடு திரும்பினால்தான் பாடத்துக்குப் போகமுடியும் என எண்ணியவனாய் பஸ்தரிப்பை நோக்கி தயக்கத்துடன் நடந்தான் கண்ணன். இப்படி நியாயமில்லாத வழியில் சேர்த்த பணம் தங்காது என்று ஆசிரியர் வகுப்பறையில் அடிக்கடி சொல்லுவார். இதைத் தெரிந்தும் நாம் எப்படி எடுத்துக்கொள்ளலாம். அவன் மனச்சாட்சி வாட்டியது. ஒருவேளை கிழவி நியாயமாகச் சம்பாதிக்கவில்லையோ. அதுதான் இவளுக்கு நட்டம் ஏற்பட்டது. அவன் மனத்துக்குள் எதிர்வாதம் எழுந்தது.

ஆனாலும் அவள் தப்புச் செய்தால், தவறாகச் சம்பாதித்தால் அவள் அனுபவிக்கிறாள். நமக்கு நியாயமாக வரவேண்டிய பணமில்லை. இதை திருப்பிக் கொடுத்து விடுவதுதான் நியாயம் என்று

மறுபடியும் மனச்சாட்சி குடைந்தது. தீர்மானம் எடுப்பதற்குள் பஸ் வந்துவிட்டது. மனச்சாட்சியை அமுக்கிவிட்டு பஸ்சுக்குள் பாய்ந்து ஏறினான் கண்ணன்.

பஸ்சில் பயங்கரக் கூட்டம். கையில் கிழவி கொடுத்த இரண்டு ரூபாய் நாணயம் இருந்தது, அதையே கண்டக்டரிடம் நீட்டினான். கண்டக்டர் வெடுக்கெனப் பிடுங்கி எவ்வளவு எனப் பாராமல் தோல் பையில் போட்டு ஒரு ரூபாய் டிக்கட் ஒன்றைக் கிழித்து அவனிடம் கொடுத்தான். வேலை நெருக்கடியில் கண்ணன் மீதி ஒரு ரூபாய் என்று கேட்டதை காதில் வாங்காமல் நகர்ந்துவிட்டார். சரி திரும்பும் போது கேட்கலாம் என கண்ணன் விட்டுவிட்டான். அவன் இறங்கும் இடம் வரும்வரை கண்டக்டர் திரும்பவே இல்லை. கண்ணன் தவித்தான். நல்லவேளை நிறுத்தம் வருகிறபோது கண்டக்டர் வந்தார்.

''ஐயா மிச்சக் காசு'' என்று இழுத்தான் கண்ணன்.........

''மிச்சமா'' ஏது......

இரண்டு ரூபாய் கொடுத்தேன் ஒரு ரூபாய் போக மிச்சம் ஒரு ரூபாய்...... என்றான் கண்ணன்.

''என்ன தம்பி ஒரு ரூபாயைத் தந்துவிட்டு விளையாடுகிறியோ'' என்றார் கண்டக்டர்.

'ஐயையோ நான் தந்தது இரண்டு ரூபா நாணயம்'' படபடப்புடன் சொன்னான் கண்ணன்.

பக்கத்தில் இருந்தவர் ''என்ன தம்பி அவர் உனக்கு மட்டுமா வஞ்சனை பண்ணுறார்'' உன்னைப்போலை எத்தனை பேருக்கு மிச்சம் எல்லாம் சரியாத்தானே கொடுக்கிறார். நல்லா யோசனை பண்ணிப் பாரு. நீதான் மறதியாக் கொடுத்திருப்பாய் என்று கண்டக்டருக்குச் சார்பாகப் பேசினார்.

இல்லை நான் கொடுத்தது இரண்டு ரூபாய் நாணயம்தான் இப்படி என்னை அதட்டுறாரே என்று கரைந்தான் கண்ணன்.

போகட்டும் விடு தம்பி கடவுள் தன் கடமையைச் செய்வாரு. உங்க பணமாய் இருந்தால் நிச்சயம் வந்திடும். உழைக்காமல் வந்த காசு வந்தமாதிரியே போயிடும். கண்டக்டருக்கும் அதே நியாயம் தான். கடவுள் கணக்கை நேர்பண்ணுவார் போ...... தம்பி என்றார் பெரியவர்.

கண்ணன் மனம் சுருக்கென்று ஒரு கணம் பதைத்தது. அவர் சொல்வது தனக்காகத்தானே என்று சிந்தனை விரிந்தது. அப்படித் தான் இருக்கவேண்டும் என்று எண்ணியபடி பஸ் நின்றதும் இறங்கி நடந்தான்.

—நன்றி : இரத்தின மாலா—

# குறளின் கூற்று



காலை வேளை, ஒரு வயோதிப அறிஞர் அந்த ஊரிலுள்ள பாடசாலையில் 'உண்மை உயர்வு தரும்' என்ற பொருளில் உரையாற்றுவதற்காக வந்து கொண்டிருந்தார். அந்தப் பாடசாலைக்குச் செல்லும் வழியை அவர் மறந்துவிட்டார்.

**★ குமரன் ★**

அந்தப் பாதையால் வந்த மாணவன் ஒருவனைப் பார்த்துப் பாடசாலை எங்குள்ளதென வினவினார். அவனோ, ''அப்படியொரு பாடசாலை இங்கில்லை'' எனப் பொய்கூறி அனுப்பிவிட்டான்.

சோர்வுடன் திரும்பிய அவர், வழியில் வந்த இன்னொரு மாணவனிடமும் அதே கேள்வியைக் கேட்டார். அவன் அவரைத் திருப்பி அழைத்துச்சென்று பாடசாலையில் விட்டான். அறிஞரும் சொற்பொழிவினை நிகழ்த்தினார். பொய் கூறிய மாணவனும், உண்மை கூறி உதவிய மாணவனும் இருந்த அந்தப் பாடசாலையில், அறிஞர் உண்மை கூறி உதவிய மாணவனைப் பாராட்டிப் பேசினார். பொய் கூறியவனோ வெட்கி நின்றான். இக்கதை எமக்குணர்த்தும் கருத்தை பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவர் இப்படிச் சொல்கிறார். ''பொய்யில்லாத உள்ளமுடையவன் உயர்ந்தோரின் உள்ளத்தில் இருப்பான்'' இதனைச் சொல்லும் குறள் இதுதான்.

''உள்ளத்தால் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்.''

எனவே, நாமெல்லாரும் உண்மையைப் பேசி உயர்வு பெறுவோம். அப்போதுதான் எம்மைப் பெரியவர்களும், இந்த உலகமும் மதிக்கும்.

# சொல்லடுக்குப் போட்டி – க

இங்குள்ள 81 கட்டங்களுள், சில மிருகங்களின் பெயர்கள் ஒழிந்துள்ளன. பெட்டிகள் தாவக் கூடாது. ஒரு பெட்டிக்கும், அடுத்த பெட்டிக்கும் தொடர்பு இருக்கத்தக்கதாக இருக்க வேண்டும். எங்கே முயலுங்கள் பார்ப்போம். விடைகளை விரைவாக அனுப்புங்கள்.

— பாபு அண்ணா —

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கு | ம | சி | று | த் | தை | பா | சி | க |
| ரி | க | ம் | கா | லா | செ | ட் | டு | ம |
| ங் | எ | ழு | அ | ஏ | கூ | னை | எ | டு |
| சி | கா | கோ | தை | சு | யா | று | க | கு |
| ரு | ப | ன் | மா | சோ | ம் | டி | ர | மை |
| டி | ளை | கு | லி | பு | ஓ | கா | ளை | லி |
| பு | க | வெள | தி | ப் | வீ | கௌ | ஈ | இ |
| சொ | னி | ன் | ளு | ரை | து | மு | லே | ஓ |
| மி | இ | சே | றை | ஞ்ரி | ந | ர | ஈ | ஐ |

★ முரண்பாட்டைக் கண்டு ஒதுங்கிக் கொள்பவர்கள் யாவரும் கோழைகளே.

—பெர்ணாட்ஷா—

எ —



# அறிவியல் அரங்கு

அறிவியல் எமக்கு அவசியமானது. இதனைக் கருத்தில் கொண்டு பல அறிவியல் விடயங்களைத் தாங்கியதாக இப் பகுதி ஆக்கப்பட்டுள்ளது. புதிய விஞ்ஞான தொழில்நுட்ப தகவல்களை 'அறம் வளர் இளந் தமிழ்' உங்களுக்கு வழங்கத் தயாராக உள்ளது. இப் பகுதியின் அவசியம் குறித்த உங்கள் கருத்துக்களை வரவேற்கிறேம்.

— பாபு அண்ணா —

## புதிர்

அது ஒரு பெரிய மரம். அந்த மரத்தில் 10 குருவிகள் அமர்ந்துள்ளன. ஒரு குருவியை, ஒருவன் அரை நிமிடத்தில் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவான். ஐந்து நிமிடத்தில் அக் குருவிகளில் எத்தனையை அவன் சுட்டு வீழ்த்துவான்?

விடையை விரைந்து அனுப்புங்கள் பார்ப்போம்!

ஏ—

# விண்வெளி நகரம்

★ த. நித்தியா ★

ஒன்றுமேயில்லாத விண்வெளியில் நகரமா என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இது விந்தையல்ல. இன்றைய விஞ்ஞான உலகம் நடத்தப் போகும் அடுத்த சாதனை தான் விண்வெளி நகரம். விண்வெளி நகரம் என்பதை விட விண்வெளிக் குடியிருப்பு என்று இதனைச் சொல்லலாம்.

எந்தவித ஆதாரமுமற்ற வானில் எப்படி விண்வெளி நகரம் அமைப்பது? பூமி எப்படி எந்த ஆதாரமுமில்லாமல் தனது ஈர்ப்பு விசையை வைத்து — சூரியனின் ஈர்ப்புக்குக் கட்டுப்பட்டு — இந்தப் பிரபஞ்சத்தில் அந்தரத்தில் உலவுகின்றதோ. அதுபோலத் தான் இதுவும்.

சாதரணமாக ஒரு செயற்கைக்கோள் பூமியின் ஈர்ப்புக்கு இணையாக தனக்கு ஒரு ஈர்ப்பினை உருவாக்கி வைத்துள்ளதால்தான் அது பூமியைச் சுற்றி வருகிறது. அதற்கென ஒரு ஈர்ப்பு விசை இல்லாவிடில் அது அந்தர வானில் பறந்து சென்றுவிடும். அல்லாவிடில் பூமியின் ஈர்ப்பினால் கவரப்பட்டு, பூமியில் விழுந்து நொருங்கிவிடும். வேறு கிரகங்களுக்குச் சென்ற விண்கலங்கள் கூட தமக்கென ஒரு ஈர்ப்பை வைத்திருப்பதால்தான் அவை மற்றைய கிரகங்களுடன் முட்டி மோதுவதில்லை.

சரி, இந்த விண்வெளிக் குடியிருப்பு எப்படி அமையும் என்பதைப் பார்ப்போம்.

சாதாரணமாக வட்டத்தை ஒட்டிய சமச்சீர் அமைப்புகளே சீராக சுழலக் கூடியதாகவும், தனக்கென ஈர்ப்பு விசையை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். செயற்கை கோள்களின் அமைப்புக்களைப் பார்த்தீர்களானால், அவையெல்லாம் ஒரு வட்டத்தையொட்டிய சமச்சீர் வடிவங்களாகவே இருக்கக் காண்பீர்கள்.

எனவே, புதிய விண்வெளிக் குடியிருப்பு ஒரு வட்டமாகவே இருக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அது எப்படி அமைக்கப்படுகிறது என்பது குறித்து பிரெஞ்சு விஞ்ஞானிகள் பல படங்கள் தயாரித்துள்ளனர்.

இந்த விண்வெளிக் குடியிருப்பு காற்று வெளியேறாத வண்ணம் முற்றாக மூடப்பட்டிருக்கும். காற்றுடன் அமுக்கமும் கட்டுப்படுத்தப் பட்டிருக்கும். அமுக்கம் இல்லாவிடில் உயிரினங்களின் இரத்தத் துளிகள் கூட ஆவியாகி, உடலை எரித்துவிடும். 1960களில் விண்வெளிக்குச் சென்றுவிட்டு திரும்பும் வழியில் சோவியத் விண்கலமொன்றில் 4 வீரர்கள் அமுக்க வேறுபாட்டால் இரத்தம் ஆவியாகி உயிரிழந்ததை இங்கு நான் உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது உங்களுக்கு ஒரு கேள்வி தோன்றலாம். பூமியில் அமுக்கம் மாறாது இருக்க எந்தக் கண்ணாடி அறை உள்ளது என நீங்கள் கேட்கலாம். அதுதான் பூமியின் வளி மண்டல அமைப்பு; ஓசோன் மண்டலம்; அயன் மண்டலம் போன்றவை ஒரு கண்ணாடி அமைப்புகள் போலவே பூமியின் அமுக்கம் மாறாது பாதுகாக்கின்றன. வளி மண்டலத்தில் உள்ள வாயுக்கள் வெளியேறாது இவைதான் பாதுகாக்கின்றன.

ஆனால், நமது விண்வெளிக் குடியிருப்பில் இது இயலாது. இங்கு உண்மையான கண்ணாடி அமைப்புகள் செய்ய வேண்டும். சுவாசிக்க ஒட்சிசன், உண்ண உணவு என்பவற்றை இங்கு மண்ணைப் பரப்பி விவசாயத்தின் மூலம் பெறலாம்.

## சந்திரக் குடியிருப்பு

இது இவ்வாறிருக்க, சந்திரனில் விண்வெளிக் குடியிருப்பு ஒன்றை அமைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? விண்வெளிக் குடியிருப் புக்கும் இது அத்திவாரமாக அமையலாம் எனவும் நம்பப் படுகிறது.

ரஷ்யாவின் விண்கலங்கள் சந்திரனில் இறங்கி அங்குள்ள பாறைக் கற்கள் சிலவற்றை எடுத்து வந்தன. அதனை ஆராய்ந்து, நைற்றேலியம், இரும்பு, அலுமினியம் ஆகிய கனிப்பொருட்களைக் கொண்டதாக அப்பாறைகள் காணப் படுவதால், சிறந்த கொங்கிறீட்டாக அவை காணப்படுவ தாக ஆய்வாளர்கள் கூறினர்.

அக்கற்களை அரைத்து நீர் சேர்த்தால் அடுத்த சில நிமிடங்களில் இறுகிப் பலமடைந்துவிடும். 'இல்மனைற்' சந்திரக் கற்களில் காணப்படுவதால், சூரிய ஒளியின் சில மூலக்கூறுகள் மூலம் உருவாகும் ஐதரசன் வாயுவினால் இல்மனைற்றைச் சூடேற்றுவதன் மூலம் நீர் கிடைக்கும். இல்மனைற்றைச் சூடேற்றுவதன் மூலம் ஒட்சிசனும் கிடைக் கும். இதன்மூலம் சுவாசிக்கலாம். சந்திரனில் சாதாரண மாக காபனீரொக்சைட்டு உள்ளது. தாவரங்கள் சுவாசிக்க இது உதவும். இதன் மூலம் உணவைப்பெற முயலலாம். ரஷ்யாவின் பரிசோதனை நிலையத்தில் சந்திர மண்ணில் வளர்ந்த தாவரங்கள், பூமியில் வளர்ந்ததைவிடச் சிறப் பாக இருந்ததாம். மின்சாரத்தைப் பெற சூரியக் கலங்க ளைப் பயன்படுத்தலாம்.

இத்தகைய முறையில் ஆய்வு தளத்தை அமைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது. இதற்கென லூனா—9; லூனா—13 ஆகிய கலங்களை அனுப்பி சாதகமான தகவல்களையும் ரஷ்யா பெற்றுள்ளது. என்ன...... விண்வெளியில் குடியி ருக்கும் ஆசை வந்துவிட்டதா? விண்வெளிக்கும் தமிழன் அகதியாகப் போகமாட்டானா என்ன?

எ —



# பறவைகள்

## அங்கம் — 2

★ மயூரன் ★

சென்ற இதழில் பறவைகளை உயிரியல் அறிஞர்கள் எட்டு வகைக்குள் அடக்கியுள்ளனர் என்றும், அதில் முதலாவது வகையான பிடித்து உட்காரும் பறவைகள் பற்றியும் கூறியிருந்தேன் அல்லவா? ஏனைய வகைகளை இவ்விதழில் பார்ப்போம்.

2. அகன்ற வாய்ப் பறவைகள் :

அகன்ற வாய்களையுடைய பறவைகளையே இவ்வாறு உயிரியல் அறிஞர்கள் கூறியுள்ளனர். இவை பிடித்து உட்காரும் பறவைகளை ஒத்தன. இவற்றின் தலை சற்றுப் பருத்திருப்பதோடு, அழகற்றதாகவும் இருக்கும். வாயும் அகன்றிருக்கும். இவற்றின் கால் விரல்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு இருப்பதால், உள்ளங் கால்கள் தட்டையாக இருக்கும். ஏதாவது ஓரிடத்தில் உட்கார்ந்து இருந்து, அங்கிருந்து வேறிடங்களுக்கு பறந்து சென்று இரையைப் பிடித்து வந்து, மீண்டும் அதே இடத்தில் உட்கார்ந்திருந்து அதனை உண்ணும். இவை விரைவாகவும், உறசாகத்துடனும் பறக்கக் கூடியன.

மீன்கொத்தி, பஞ்சுருட்டான், பக்சிக்குருவி, மலைமொங்கான், கொன்டலாத்தி, பனங்காடை ஆகிய பறவைகள் அகன்றவாய்ப் பறவைகளுக்கு தக்க உதாரணங்கள் ஆகும்.

3. பற்றி ஏறும் பறவைகள் ( *Climbing Birds* ) :

கிளைகளை நன்றாகப் பற்றி ஏறக்கூடிய பறவைகளையே பற்றி ஏறும் பறவைகள் என்பர். இவற்றிற்கு இரு விரல்கள் முன்னாலும், இரு விரல்கள் பின்னாலும் அமைந்திருக்கும். கிளிகள், குயில்கள், மரங்கொத்திகள் இவ்வகையினவே. கிளிகள் தமது வளைந்த அலகினைப் பயன்படுத்திப் பற்றி ஏறுகின்றன. மரங் கொத்திகள் தமது முரடான வாலை மரத்திலூன்றி, அலகுகளால் பட்டையைக் கொத்திச் செல்லும். பட்டைகளுக்குள் இருந்து பூச்சிகள் கலைந்து வெளியேவர, அவற்றை தமது கொழுக்கிகளுள்ள நாவால் குத்திச் சாப்பிடும். கிளிகள் பழங்களைத்தானா உண்கின்றது? மாமிசம் உண்ணும் கிளிகளும் உலகில் உண்டு. என்ன ஆச்சரியப்படுகிறீர்களா ?

நியூசிலாந்திலுள்ள கியா (*Kea*) என்ற கிளியினப் பறவைகள் பழங்களுக்குப் பதிலாக ஊனுண்ணுகின்றன.

4. ஊனுண்ணும் பறவைகள் ( *Birds of Prey* ) :

ஊனுண்ணுபவைதான் இவ்வகைப் பறவைகளாகும். இவற்றின் அலகு உறுதியாகவும், நுனியில் வளைந்தும் இருப்பதால் ஊனைக் கிழித்து உண்ண முடிகிறது. கால்களிலுள்ள நீண்ட பலமான வளைந்த நகங்களும் இரையைப் பிடிக்கவும், கிழிக்கவும் உதவுகின்றன. அலகின் அடிப்பாகத்தில் மெழுகு போன்று உயர்ந்து தடித்த உயர்வு ஒன்றுண்டு. காலில் உள்ள நான்கு விரல்களில் மூன்று முன்னும், ஒன்று பின்னுமாக அமைந்து இருக்கும். ஆந்தைகள் மட்டும் ஒரு விரலை விருப்பப்படி திருப்பி அமர முடியும். கழுகுகள், பருந்துகள், வைரிகள், வல்லூறுகள், ஆந்தைகள் போன்றன ஊனுண்ணும் பறவை வகையைச் சேர்ந்தன.

5. புறாக்கள், கபோதம் முதலியன (*Dovts and Pigeons*) :

இவை உலகெங்கும் பரந்து காணப்படும் பறவையினங்களாகும். இவற்றின் அலகுகள் பலமற்றவை. இறகுகள் பலமுள்ளவை. தானியங்களையும், பழங்களையும்

இவை உட்கொள்ளும். இவற்றிற்கு பறந்து திரிவதில்தான் இன்பம். ஆதலால் இவை பல மைல் தூரங்கள் பறந்து சென்று வரக்கூடியன. இவற்றின் நாசித் துவாரத்தின் மேல் மெதுவான வீக்கம் ஒன்றுண்டு. இவை மென்மை யான குணமுடையவை என்பதால் ஏனைய பறவைகளு டன் சண்டை செய்யாது.

நாம் அன்றாடம் ஆலயக் கோபுரங்கள், பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றி லெல்லாம் காணும் மாடப் புறாக்கள் இவ் வகையினவே. இவற்றைவிட மணிப்புறா, நியூ கினிபுறா, காட்டுப்புறா போன்ற பறவைகளும் இவ்வகைக்கு உதா ரணங்களாகும். தற்போது உல



கில் இல்லாது அழிந்துவிட்ட டோடோ என்ற பறவையும் இவ்வகையைச் சேர்ந்தது என்றே உயிரியல் வல்லுனர்கள் கூறியுள்ளனர்.

மனித நடமாட்டமுள்ள இடங்களிலெல்லாம் அச்ச மின்றி வாழும் இப்பறவைகள் பல இன வகைகளாகப் பெருகிக் காணப்படுகின்றன. பல மைல் தூரம் பறக்கக் கூடிய இவ்வினப் பறவைகளை முன்னர் போர்களில் செய்தி அனுப்புவதற்குப் பயன்படுத்தினார்கள்; எவ்வளவு தூரத் தில் கொண்டு சென்று விட்டாலும், தன் இருப்பிடத்தை அடையக்கூடிய வல்லமை இவற்றிற்கு உண்டு. சமாதா னத்தின் சின்னமாக 'வெண் புறா' தான் உள்ளது என் பதிலிருந்து இந்தப் பறவையின் முக்கியத்துவத்தை நாம் உணரலாம்.


மிகுதி வகைகளை அடுத்த இதழில் பார்ப்போம்.

[தொடரும்...

ஊ

# அணுகுண்டு அழிவுகள்

அறிவியல் கண்டு பிடித்த ஆற்றல் வாய்ந்த அணு இறுதியில் அழிவுக்குப் பயன்பட்ட வரலாற்றுச் சோக நிகழ்வு நடந்து 47 வருடங்கள் கடந்துவிட்டன. ஆம்! யப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது. முதலாவது குண்டு 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ந் திகதி குட்டிப்பையன் என்றழைக்கப்பட்ட



## அ. செந்தூரன்

யுரேனிய அணுகுண்டு ஹிரோஷி மாநகர் மீது வீசப்பட்டது 1945 ஆகஸ்ட் 9-ந் திகதி (3 தினங்களின் பின்னர்) பெருத்த பையன் எனப்பட்ட புளுட்டோனிய அணுகுண்டு வீசப்பட்டது. இதனால் இரு நகரங்களும் சாம்பல் மேடாக அழிந்து போனது. இரண்டு இலட்சம் யப்பான் மக்கள் கருகி மடிந்தனர். கதிரியக்க விளைவுகளால் ஒரு இலட்சம் பேர் வரை மடிந்தனர். இன்றும் அங்கு வருடாந்தம் 2000 பேர் இறக்கின்றனர். ஊனமான குழந்தைகள் பிறக்கின்றன. புல் பூண்டுகள் கூட அணுகுண்டு வீசிய இடத்தில் முளைக்காதுள்ளது. வரலாறு காட்டும் கொடூர நிகழ்வுகளில் ஒன்றாக இது அமைகிறது. இனியாவது உலகம் அறிவியலை அழிவுக்குப் பயன்படுத்தாது இருக்கட்டும்.

★ அறிவு இல்லையென்றால் ஒன்றுமேயில்லை. சேமிப்பதற்கு மட்டுமல்ல. சரியான நபருக்குக் கொடுக்கவும் அறிவு தேவை.

—ஸ்பெயின் பழமொழி—

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)



ள—

# சிறுவர் மலர் கேள்வி - பதில்

**கேள்வி :**

ஒரு தானத்தை முறையே 2, 3, 4, 5, 6 என்ற எண்களால் வகுத்தால் மிகுதி முறையே ஒன்று வரும். ஏழால் (7) வகுத்தால் மிகுதி வராது — அந்த எண் என்ன? விடை ; பக்கம் 38

## கல்

கோவிலில் கல் கடவுள்
சோற்றில் அது சுமை
ஆற்றில் அது தடை
நாய்க்கு அது பகை
மனைக்கு அது பலம்
சபைக்கு அது குழப்பம்.

வீட்டுக்கும் நாட்டுக்கும் மனித சமுதாயத்திற்கும் பயன்பட வேண்டும் என்ற நம்பிக்கையோடு படைக்கப்பட்ட இந்த உடலைப் புகை பிடிப்பதனாலும், மது குடிப்பதனாலும் அழித்துக் கொள்ள நமக்குச் சிறிதும் உரிமையில்லை. படைத்தவனுக்கு நாம் செய்யும் பச்சைத் துரோகம் இதுவாகும்.

தொகுப்பு; திருமதி சரஸ்வதி தியாகராசன்
காணிப்பதிவகம்
பருத்தித்துறை.

அ—

## விடுதலை வீரர்கள்

# நேதாஜி - சுபாஸ் சந்திரபோஸ்

—சு. ஸ்ரீகுமரன்—

இந்திய விடுதலைப் போராட்டத்தை நடத்தியவர்களில் நேதாஜி முக்கியமானவர். அவர் 1897-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ந் திகதி இந்தியாவிலுள்ள வங்காளத்தில் பிறந்தார். சிறு வயதிலேயே புத்தகப் பிரியராகவும். இந்திய விடுதலைப் போரில் ஆர்வங் கொண்டவராகவும் விளங்கிய நேதாஜி கலைப்பட்டதாரியாக வெளியேறி, 1919-ம் ஆண்டு இங்கிலாந்து சென்று, ஐ. சி. எஸ். பரீட்சையில் தேறி உயர் பதவி வகித்தார். பின்னர் 1921-ல் அப்பதவியை இராஜினாமா செய்துவிட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். அடுத்த வருடமே 'பொவேட்' என்ற இதழின் ஆசிரியராகவும் விளங்கினார்.

1924-ம் ஆண்டு பிரதம நிர்வாக அதிகாரியாக இருந்த வேளையில் அவர் ஆங்கிலேய அரசால் பர்மாவிலுள்ள மண்டலே சிறையில் அடைக்கப்பட்டார். மூன்று வருடங்களின் பின் படுக்கையில் விழுந்த பின்னரே அவர் விடுவிக்கப்பட்டார். இவ்வாறு தொடர்ந்தும் பலமுறை சிறைசென்று, பலத்த சித்திரவதைகளை அனுபவித்தார். 1940-ல் கைது செய்யப்பட்டிருந்தபோது, அவர் உண்ணாவிரதம் இருந்ததால் விடுவிக்கப்பட்டு, வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவ்வேளை மாறுவேடம் பூண்டு காபூலுக்குத் தப்பிச் சென்றார். பின்னர் நீர்மூழ்கிக் கப்பல்மூலம் யப்பான் தலைநகர் டோக்கியோவிற்குச் சென்றார்.

பின்னர் சிங்கப்பூரில் இருந்தவாறு இந்திய சுதந்திர அரசையும், சுதந்திரப் படையையும் நிறுவினார். அதில் ஆங்கிலேயரிடம் வேலை பார்த்த பல இந்தியச் சிப்பாய்களும், பெண்களும் அடங்கியிருந்தனர். யப்பானும், ஜேர்மனியும் ஆதரவை வழங்கியிருந்தன.

சுதந்திரப்படை சிங்கப்பூரிலிருந்து பர்மா ஊடாக இந்தியாவை அடைந்து, ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த மணிப்புரி சமஸ்தானத்தைக் கைப்பற்றியது.

அவ்வேளை தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த முப்பது இலட்சம் இந்தியர்களின் தனிப்பெரும் தலைவராகவும், தளபதியாகவும் அவர் விளங்கினார். அவரை எல்லோரும் நேதாஜி (தலைவர்) என்றே அழைத்தனர்.

2-ம் உலகப் போரில் யப்பானும், ஜேர்மனியும் தோற்றதை அடுத்து, போராட்டமும் தடைப்பட்டது. ஆயினும் அவர் போராட்டத்தைக் கைவிடவில்லை.

1945-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18-ந் திகதி டோக்கியோவுக்கு செல்லும் வழியில் போர்மோசாதீவில் இடம்பெற்ற விமான விபத்தில் அவர் இறந்ததாக விசாரணைகள் உறுதி செய்துள்ளன. ஆயினும், அவர் ரஷ்யாவில்தான் நோய்வாய்ப்பட்டு இறந்தார் எனவும் அண்மையில் சில தகவல்கள் வெளியாகியுள்ளன. எவ்வாறெனினும் அவர் ஒரு ஒப்பற்ற விடுதலை வீரர் என்பது தெளிவு.

**சாதனை புரிந்த மனிதர்கள் எல்லாரும் யாரிடம் இருந்து உதவியைப் பெற்று முன்னேறினார்கள்? அவர்கள் சந்தித்த தடைகள், தாம் பிடிவாதமாக வெற்றிபெற வேண்டும் என்ற கடின உறுதியைத் தந்து அவர்களை முன்னேற்றின.**

— மத்தியூஸ் —

---

குழந்தைகளுக்கு கவலையே இல்லை என்கிறார்கள். அவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? குழந்தைகள் பெரியவர்கள் போல நிமிடத்திற்கு நிமிடம் தவறு செய்கிறார்களா கவலைப்படுவதற்கு?

— ஜோர்ஜ் எலியட் —

# விநாயகர் தரும நிதியம் 18 - 07 - 92-ல் நடாத்திய அறநெறித் தேர்வில் பரிசில் அவை பெறும்

| | பாடசாலையின் பெயர் | விலாசம் | விண்ணப்பித்த மாணவர் தொகை | தேர்வெழுதிய மாணவர் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திக்கம் சித்திவிநாயகர் வித்தி. | அல்வாய் | 14 | 14 |
| 2. | ஏழாலை சை. சன். மார். வித். | ஏழாலை | 115 | 59 |
| 3. | மெதடிஸ் பெண் உயர் கல்லூரி | பருத்தித்துறை | 250 | 95 |
| 4. | மே. பு. சை. பி. வித்தியாசாலை | புலோலிமேற்கு | 45 | 25 |
| 5. | சரஸ்வதி வித்தியாசாலை | அச்சுவேலி | 114 | 64 |
| 6. | புலோலி கி. அ. த. பாடசா. | புலோலி | 15 | 15 |
| 7. | திருஞானசம்பந்த வித்தியா. | சுன்னாகம் | 10 | 9 |
| 8. | சை. பி. கா. வித்தியாசாலை | சங்கானை | 9 | 6 |
| 9. | மெ. மி. த. க. பாடசாலை | தட்டாதெரு பரு. துறை | 12 | 10 |
| 10. | அம்பாள் வித்தியாலயம் | அல்வாய் | 54 | 36 |
| 11. | குடத்தனை அ. மி. த. க. பாட | குடத்தனை | 53 | 42 |
| 12. | மணியகாரன் தோட்டம் த. வித். | கரவெட்டி | 56 | 56 |
| 13. | அல்வாய் வட. றோ. க. த.க. பா. | அல்வாய் | 103 | 66 |
| 14. | கற்கோவளம் மெ. மி. த. க. பா. | பருத்தித்துறை | 55 | 38 |
| 15. | தம்பசிட்டி மெ. மி. த. க. பாட. | பருத்தித்துறை | 105 | 75 |
| 16. | சித்தங்கேணி கணேச வித். | பண்டத்தரிப்பு | 40 | 33 |
| 17. | தெல்லிப்பளை சை. பி. வித். | சுன்னாகம் | 37 | 13 |
| 18. | வட. இந். ம. கல்லூரி | பருத்தித்துறை | 330 | 46 |
| 19. | மணற்காடு றோ. க. த. க. பா. | குடத்தனை | 75 | 23 |
| | | மொத்தம் | 1492 | 725 |

துன்னாலை அ. த. க. பாடசாலை கரவெட்டி 50 — 6 பேர் 48 புள்ளி.

★ இப்போட்டிக்கான பரிசில்கள் 04-10-92-ல் சரஸ்வதிபூசை

# 5-ம், 6-ம், 7-ம் ஆண்டு மாணவர்களுக்கு பெறும் பாடசாலைகளின் விபரங்களும் பரிசில் தொகையும்

| தேர்வுக்குத் தோற்றிய விகிதாசாரம் | மொத்த புள்ளி விகிதாசாரம் | பரிசில் பெறும் மாணவர் தொகை | 1-ம் பரிசில் பெறும் மாணவர் தொகை | 2-ம் பரிசில் பெறும் மாணவர் தொகை | 3-ம் பரிசில் பெறும் மாணவர் தொகை | குறுவணக்கம் செலுத்திய ஆண் மாணவர்கள் | குறுவணக்கம் செலுத்திய பெண் மாணவர்கள் | மொத்தப் பரிசில் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 100 | 41·5 | 07 | 2 | 03 | 02 | 01 | — | 4100 |
| 52 | 39 | 30 | 3 | 15 | 12 | 04 | 07 | 14600 |
| 38 | 37 | 44 | 10 | 13 | 21 | — | 12 | 14700 |
| 55 | 37 | 14 | 02 | 04 | 08 | 05 | 09 | 7400 |
| 56 | 30 | 22 | — | 08 | 14 | — | — | 7500 |
| 100 | 27 | 03 | 01 | 02 | — | — | 01 | 2100 |
| 90 | 26 | 02 | — | — | 02 | — | — | 500 |
| 67 | 24 | 01 | — | — | 01 | — | — | 250 |
| 85 | 22 | 03 | — | 01 | 02 | — | — | 1000 |
| 66 | 18·5 | 08 | — | 02 | 06 | 02 | 04 | 3100 |
| 80 | 18 | 08 | 02 | 03 | 03 | 01 | 04 | 4750 |
| 100 | 16·5 | 08 | — | 06 | 02 | 01 | 05 | 4100 |
| 64 | 15 | 07 | — | 02 | 05 | 05 | 02 | 2950 |
| 68 | 14 | 06 | 01 | 03 | 02 | — | — | 3000 |
| 71 | 12 | 07 | 01 | 02 | 04 | 01 | 01 | 3200 |
| 82 | 9 | 0 | — | — | — | — | — | — |
| 35 | 3 | 0 | — | — | — | — | — | — |
| 14 | 36 | 20 | 06 | 06 | 08 | — | 15 | 8000 |
| 30 | 12 | 02 | — | 01 | 01 | 01 | 01 | 950 |
| | | 192 | 28 | 71 | 93 | 21 | 60 | 82200 |

இப் பாடசாலைப் பரீட்சை நிராகரிக்கப்பெற்றது.

தினத்தன்று வழங்கப்பெறும் ★

உ—

# மகாகவி பாரதியார்

—செல்வி பாமினி சின்னத்தம்பி
இராமநாதன் கல்லூரி



பாரதியார் உலகின் சிறந்த கவிஞர்களில் முதன்மையானவர். அவர் 1882-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ந் திகதி இந்தியாவின் எட்டயபுரத்தில் பிறந்தார். அவரது தந்தையார் சின்னச்சாமி ஐயரும், தாயார் லட்சுமி அம்பாளும் அவருக்கு சுப்பிரமணியன் எனப் பெயரிட்டனர்; சுப்பையா என்று செல்லமாகவும் அழைத்தனர். 11 வது வயதில் எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்கள் அவரது புலமையைப்போற்றி, 'பாரதி' என்ற பட்டமளித்துக் கௌரவித்தனர்.

எங்கள் மகாகவி பாரதியார் பல்லாயிரக் கணக்கான பாடல்களை வழங்கிச் சென்றுள்ளார். தெய்வப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், தேசிய கீதங்கள், சிறுவர் பாடல்கள், நீதிப் பாடல்கள் என்று, பாரதியார் தொடாத விடயங்களே இல்லை எனலாம். அவர் சிறுவர்களுக்கு நீதி கூறும் புதிய ஆத்திசூடியை இயற்றித் தந்துள்ளார். அச்சந்தவிர், இளைத்தல் இகழ்ச்சி, உடலினை உறுதி செய் என்று பல நெறிப்படுத்தல்களை அதன் மூலம் சிறுவர்களுக்கு வழங்கியுள்ளார்.

பாப்பா பாடலிலும் பலவகை நீதிகளையும், சிறுவர்களுக்கான அறிவுரைகளையும் வழங்கியுள்ளார். (அவை 'அறம் வளர் இளந்தமிழில்' தொடராக வெளியிடப்பெறுகிறது) பல தெய்வப் பாடல்களை பாடியுள்ள அவர் சிறுவர்களைப் பார்த்து 'தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்' என்று, உண்மையே தெய்வம் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

இவ்வாறு கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் பெரும் பாடல்களையும் பாடியுள்ள பாரதியார் 39 வது வயதில் 1921 செப்டெம்பர் 12-ந் திகதி மறைந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர ஈடுபாடு கொண்ட பாரதியார், 18 மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவற்றினுள்ளும் தமிழ்மொழியே சிறந்தது என்று கூறிப் பல பாடல்களையும் பாடி உள்ளார்.

தமிழ்க் கவிஞர்களுள் பெருங் கவிஞன் பாரதி எனின் பொய்யல்ல. அவரது பாடல்களை நாம் அனைவரும் படித்து ஒழுக வேண்டும்.

உ

# பாப்பா பாட்டு - 2

பாலைப் பொழிந்து தரும் பாப்பா — அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா !
வாலைக் குழைந்து வரும் நாய்தான் — அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா !

★ ★ ★

வண்டி இழுக்கும் நல்ல குதிரை — நெல்லு
வயலில் உழுது வரும் மாடு !
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு — இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா !

★ ★ ★

காலை எழுந்தவுடன் படிப்பு — பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு !
மாலை முழுதும் விளையாட்டு — என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா !

★ ★ ★

பொய் சொல்லக் கூடாது பாப்பா — என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா !
தெய்வம் நமக்குத் துணை பாப்பா — ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா !

★ ★ ★

பாதகஞ் செய்வோரைக் கண்டால் — நாம்
பயம் கொள்ளலாகாது பாப்பா !
மோதி மிதித்து விடு பாப்பா ! — அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா !

—சுப்பிரமணிய பாரதியார்

ஸ —

அறிவியல் மணிகள் :

# ★★★ ஆதர் சீ கிளார்க் ★★★

— தி. தவபாலன்

புகழ் பூத்த ஒரு விஞ்ஞானி; வானியல் ஆராய்ச்சி யாளர்; அறிவியல் புனைகதை எழுத்தாளர்; பல விஞ் ஞான நூல்களை எழுதியவர்; இலங்கையின் விஞ்ஞான ஆலோசகர்; மொரட்டுவ பல்கலைக்கழக முதல் வேந்தர்... இவ்வாறு பல்வேறு தகைமைகளையும் கொண்ட ஒரு அறிஞர்தான் ஆதர் சீ கிளார்க்.



இவர் 1917-ம் ஆண்டு டிசம் பர் மாதம் 16-ந் திகதி இங்கி லாந்திலுள்ள சோமசெற் என்னும் இடத்தில் சாள்ஸ் ரைட்கிளார்க்- நோறாமேரி தம்பதிகளுக்கு மக னாகப் பிறந்தார். லண்டன் கிங்ஸ் கல்லூரியில் பயின்ற கிளார்க் கணிதம், பௌதிகவியல் பாடங்க ளில் முதன்மைச் சித்தி பெற்றார்.

1941-ல் 'ராடர் சமிஞ்ஞை' ஏற்பாளராகப் பணி புரிந்தார். 1945-ல் தந்தியற்ற உலகம் (*Wireless world*) என்ற விஞ்ஞான நூலை எழுதினார். செய்மதிகளின் அடிப்படைக் கோட்பாடு இவரால் ஆக்கப்பட்டு, இன்றைய செய்மதித் தொடர்புகளுக்கு வித்திடப்பட்டது. அவரால் எழுதப்பட்ட 20 வருடங்களின் பின்னரே, செய்மதிகள் விண்ணிற்கு ஏவப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் 1965-ல் அமெரிக்க பிரதமர் இவரை அழைத்து, செய்மதி ஒன்றை அமைக்க உதவுமாறு கோரி இவரது ஆலோசனைமூலம் முதலாவது தகவல் தொடர்பு செய்மதியான 'இன்டல்சட்' விண்ணுக்கு அனுப்பப்பட்

டது. இது 22,300 மைல்கள் தொலைவில் இயங்கியது. சந்திரனுக்குச் சென்ற அப்பலோ கலங்களை வழிப்படுத்தியவரும் இவரே.

அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்த கிளார்க், விவாகரத்துச் செய்துவிட்டு இலங்கைக்கு வந்தார். இலங்கையின் கடல் வளங்களை ஆராய்ந்து, நூலொன்றையும் எழுதியுள்ளார்.

இலங்கையிலே எமது தமிழீழப் பகுதியான யாழ்குடா நாடே ரொக்கட் தளம் அமைக்க ஏற்ற இடம் என்று 1960 களில் கூறினார் ஆதர் சி கிளார்க். அவரது கருத்துப்படி சாவகச்சேரிக்கும், கொடிகாமத்துக்கும் இடையில் இத்தளம் அமையும். ரொக்கட் ஏவு தளங்கள் எல்லா இடங்களிலும் அமைக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கொழும்பில் தங்கியுள்ள அவர் இலங்கையைத் தனது இரண்டாவது தாயகமாகக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் முதல் வேந்தராக விளங்கும் அவரது பெயரில் பல்கலைக் கழகத்தில் ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் உள்ளது.

இவர் 28 விஞ்ஞானப் புனைகதை நூல்களையும், 26 விஞ்ஞானக் கட்டுரை நூல்களையும் ஆக்கியுள்ளார். இவரது நூல்கள் உலகெங்கும் 10 மில்லியன் (ஒரு கோடி) பிரதிகளுக்கு மேல் விற்பனையாகின்றன.

இவரைப்பற்றி உலக அளவில் 5 நூல்களும், 500ற்கும் அதிகமான கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இன்றைய அறிவியல் மணிகளில் குறிப்பிடத்தக்க அவ்வறிஞரை ''அறம் வளர் இளந் தமிழ்'' வாழ்த்துகிறது !

நன்றி: ஈழநாதம் 15-04-90

# சிரிப்போமா!

இரு நண்பர்கள் ஒரு பாதை வழியாகச் செல்லும் போது அவர்கள் சென்ற பாதை ஓரமாக இருந்த சிற்றுண்டிக் கடையில் அவர்களின் கண் சென்றதாம். அச்சிற்றுண்டிக் கடையில் பெரிய எழுத்தில் ஒரு அறிவித்தல் பலகை. அதில் இலவச உணவு. ஆனால் நீங்கள் உண்ட உணவின் காசை உங்கள் பேரன் தரவேண்டும் என எழுதப்பட்டு உள்ளதாம். இதை வாசித்த இருவருக்கும் ஒரே சந்தோசம். ஏன் தெரியுமா? அவர்கள் இருவருக்கும் பிள்ளைகள் இல்லை. பிள்ளை இல்லாதவருக்கு எப்படி பேரப்பிள்ளை பிறக்கும்? இருவரும் தம் மனதிற்குள்ளே சிரித்துக்கொண்டு கடைக்குள் சென்று ஆசனத்தில் அமர்ந்து

தொகுப்பு : பூபாலசுந்தரம் தயாளினி
ஆண்டு – 12, கம்பர்மலை

அக்கடையில் உள்ள உணவு யாவற்றையும் உருசி பார்த்தார்களாம். இருவரின் வயிறும் நிறைந்தது. இருவரும் தாம் புறப்பட எழுந்தார்களாம். எழும்போது கடை முதலாளி அவர்களிடம் ஒரு பட்டியலைக் கொடுத்து காசைத் தருமாறு கேட்டாராம். உடனே அவர்களிற்கு கோபம் பொத்திக்கிட்டு வந்ததாம். அவர்கள் இருவரில் ஒருவன் என்னையா அறிவித்தல் பலகையில் என்ன எழுதி உள்ளீர்? என வெருட்டினாராம். அதற்கு அவர் அமைதியாக நீங்கள் உண்ட பணம் அல்ல. உங்கள் பெற்றோரின் தந்தை உண்ட பணம் தான் என்றாராம். இருவரும் அதிலே மயங்கி வீழ்ந்து விட்டார்களாம். ஏன் தெரியுமா? அவர்கள் உண்ட உணவின் பணத்தைவிட 15 மடங்கு பணம் அப்பட்டியலில் இருந்ததாம்.

ஈ—

# உற்பத்திகளை ஊக்குவிப்போம்

— செல்வன் செந்தூரன் சிவபாலன் —
கொற்றையூர்

தானியம் எங்களுக்கு முக்கியம். தானியங்களில் எள், குரக்கன், சாமை, தினை போன்றவற்றை நாங்கள் உற்பத்தி செய்யலாம். எள் விதைத்து எண்ணைகளைப் பெறலாம். குரக்கன், சாமை, தினை போன்றவற்றிலிருந்து மாவைப் பெறலாம். காய்கறிகள், பழவகைகள், கிழங்கு வகைகளையும் உற்பத்தி செய்யலாம். கத்தரி, வெண்டி, பூசனி, தக்காளி போன்ற செடிகளையும், கொடிகளையும் உற்பத்தி செய்யலாம். இன்னும் எத்தனையோ காய்கறிகளையும் உற்பத்தி செய்யலாம். வாழை, மா, பலா, பப்பாளி போன்ற மரங்களை நாட்டலாம். கிழங்குகளிலும் மரவள்ளிக் கிழங்கு, வத்தாளைக் கிழங்கு போற்றவற்றையும் உற்பத்தி செய்யலாம். அரிசியையும் எங்கள் நாடு இறக்குமதி செய்கிறது. கால் நடைகளை வளர்க்கலாம்.

ஆடுகளையும், மாடுகளையும் பாலுக்காக வளர்க்கலாம். பாலிலிருந்து ஆடையெடுத்த பால், பாற்கட்டி, நெய், மாப்பால், வெண்ணெய் போன்ற பாற் பொருட்களைப் பெறலாம். பாற் பண்ணைகளையும், நடாத்தலாம். கால் நடைகளைக் கொண்டு உழவர்கள் உழுதார்கள். இந்தக் காலத்தில் இயந்திரங்களால் உழுகிறார்கள். நாங்கள் கால் நடைகளை வளர்க்கலாம். அது எமக்குப் பயன் தரும். நாங்கள் உற்பத்திகளை ஊக்குவிக்கலாம்.

ஸ —



# பனையின் பயன்கள்

தேவலோகத்திலே அரியதொரு மரம் உண்டு. அதன் பெயர் கற்பகதரு. அந்த மரம் யார் எதை விரும்பினாலும் அதை அவர்களுக்குக் கொடுக்குமாம். அதேபோல பூலோகத்திலும் ஓர் மரம் உண்டு. அது மக்களுக்கு பல நூறு பயன்களைக் கொடுக்கின்றது. அதன் பெயர் பனை. அதனால் அதனை பூலோக கற்பகதரு எனக் கூறுவார். பனை ஓர் புல்லினத்தைச் சேர்ந்தது. இது அக வளர்வு விருட்சம். பனையின் வயது ஆயிரம் ஆண்டுகள் என்பர் அறிஞர்.

பனை அடி தொடக்கம் முடிவரை பல பயன்களைத் தருகின்றது. குருத்தோலை சித்திர வேலைப்பாடு உள்ள பெட்டி, பாய், கடகம், கூடை, தொப்பி முதலியன இழைப்பதற்கு பயன்படுகின்றது. பச்சை ஓலை மாடுகளுக்கு நல்ல உணவாகிறது. வேலி அடைக்கவும், வீடு வேயவும், மண்ணுக்கு பசுந்தழை உரமாகவும் உபயோகப்படுகிறது. ஓலையின் அடிமட்டை அழகான வேலி அமைக்கவும், விறகாகவும் பிரயோசனப்படுகிறது. அந்த மட்டையின் நாரைக் கொண்டு கயிறு திரிக்கலாம். பலவகை தூரிகைகள் செய்யலாம். கங்குமட்டை, பன்னாடை, என்பனவும் வீணாவதில்லை; விறகாகின்றன.

பனையின் இளம் பிஞ்சு நுங்கு எனப்படும். நுங்கு மிகச் சுவையான பானம். நுங்கு முற்றி காயாகி, பழமாகிறது. பனம் பழமே பனையின் மிகப் பிரதான பயன் எனலாம். பனம் பழத்தைச் சுட்டு, தோலை உரித்து உள்ளே உள்ள களியைக் கறந்து உணவாக உட்கொள்வர். பனங்களியை அதிக அளவில் எடுத்து

★ 27-ம் பக்க கேள்விக்குரிய விடை : 721

பாயிலே தடவி வெய்யிலிலே காயவிட்டு பனாட்டு செய்வர். பனாட்டு சுவையும், சத்தும் மிக்கதோர் உணவு. ஆவணி மாதத்திலே பனம் விதைகளை பாத்தியிலே பரப்பி மண்ணால் மூடி விடுவர். மார்கழி, தையில் அப்பாத்தியைக் கிண்டினால் வரிசை வரிசையாகக் கிழங்குகள் தென்படும். பனங்கிழங்கைச் சுட்டும், அவித்தும் உணவாக உண்பர். அவித்த கிழங்கைக் கிழித்து வெய்யிலில் காயவிட்டு புழுக்கொடியல் ஆக்குவார்கள். பச்சைக் கிழங்கைக் கிழித்து ஒடியல் ஆக்குவார்கள். ஒடியலை இடித்து மாவாக்கி பிட்டு, கூழ் முதலிய உணவைச் சமைப்பர். அவ்வுணவுகள் புரதச் சத்து நிறைந்தவை; சுவையானவை. இவையனைத்தும் பனம்பழம் நமக்குத் தரும் பரிசுகள்.

பனம் பாளையை சீவி கள்ளும், பதநீரும் இறக்குகின்றார்கள். கள்ளில் இருந்து பனஞ்சாராயம் வடிக்கிறார்கள். பதநீரைக் காய்ச்சி பனங்கட்டி, பனஞ்சீனி என்பன செய்கிறார்கள். பனை மரத்தை பிளந்து சீவி வீட்டுக் கூரை மரங்களாக உபயோகிப்பர். துலாவாகச் செய்வர். சீவிய துண்டு துணுக்குகளும் வீண் போவதில்லை. நல்ல விறகாகப் பயன்படுகின்றது.

ஒரு பனை மரத்தைத் தறித்தால் அம்மரத்துக்குப் பதிலாக இரண்டு அல்லது மூன்று மரங்களை நடல் வேண்டும். இன்று ஆராய்ச்சிகள் மூலம் பனையில் இருந்து நவீனமான பல பொருட்கள் செய்யப்படுகின்றன. அவற்றில் பல வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. அதனால் பெருந்தொகைப் பணத்தைப் பெறுகின்றோம்.

**செல்வி த. அனுராதா**
ஆண்டு — 8
வட இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை.

பனை மரத்திற்கான விதையை நட்டு எவரும் தண்ணீர் ஊற்றுவதில்லை. அது யாருடைய உதவியுமின்றி தனது வேரை நன்கு ஆழத்தில் செலுத்தி தனக்கு தேவையான நீரையும் தாது உப்புக்களையும் பெற்றுக்கொண்டு வளர்ந்து இறுதிவரையும் எண்ணற்ற பயன்களை சகல சீவராசிகட்கும் ஈந்து வருகிறது. மனிதர் பிறந்தது முதல் அவர்கள் இறக்கும்வரை சுற்றத்தவர்கள் அவர்களை பலவிதத்தில் போசிக்கின்றார்கள். ஆனால் அவர்களின் மூச்சு

போனபின் அவர்கள் எதற்குமே பயனின்றி மண்ணாகுகின்றார்கள். பனைமரத்தின் உதவி கொண்டு செய்யப்பட்ட பொருட்கள், வீட்டின் கூரைகளுக்கு இடப்பட்ட மரங்கள் என்பன பரம்பரையாக மக்களுக்கு எவ்வளவோ உதவியாக இருந்து வருகின்றன. ஆகவே தேவலோகத்தில் இருக்கின்றதென்று சொல்லப்படும் கற்பகதருவிலும் பார்க்க பூமியிலுள்ள பனையானது கூடியளவு பயனை விளைவித்து கற்பகதரு என்ற பெயருக்குரியதான பலனை அளிக்கிறது என்பது முழுக்க உண்மையாகும்.

"சொல்லாமலே செய்வர் பெரியோர் சொல்லிச் செய்வர் சிறியர்"

— நிறுவனர்

---

ஸ் —

# தவறுக்கு வருந்துகிறோம்

## (உண்மையைக் கடைப்பிடிப்போம்)

எமது 14 – 07 – 92-ம் திகதிய அறம் வளர் இளந் தமிழ் வெளியீட்டில் உண்மையைக் கடைப்பிடிப்போம் என்னும் கட்டுரையில் பக்கம் 31-ல் அரிச்சந்திரனின் கதையைக் கூறும்போது அரிச்சந்திரன் சூதாடி நாடு நகரங்கள் என்பவற்றை இழந்தான் என தவறுதலாக குறிப்பிட்டு விட்டோம்.

நளன் சூதாடி நாடு நகரத்தை இழந்த கதையின் ஞாபகத்தில் இதை எழுதிவிட்டோம். தவறுக்கு மனம் வருந்துகிறோம். மேலும் இக்கதையில் அரிச்சந்திரனின் மனைவி சந்திரமதியினது கழுத்தை வாளால் வெட்டும் பொழுது வாளானது மாலையாக விழுகிறது எனக் குறிப்பிடுவது, தற்போதைய விஞ்ஞான உலகில் உள்ள நாம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது.

எசமானின் கட்டளைப்படி வாளினால் வெட்டத் துணிந்த அரிச்சந்திரனின் நேர்மையையும், தீரத்தையும் பாராட்டி வாளைத் தடுத்து நிறுத்திய எசமானன் மாலையைக் கொடுத்து சந்திரமதியின் கழுத்தில் போட்டதாகவே கதை அமைய வேண்டுமென நம்புகின்றோம். புராணக் கதைகள் என்ற வகையிலே கதைகளில் கற்பனைகள் கலப்பது தவிர்க்க முடியாததே.

இவற்றை சிலர் எமக்குச் சுட்டிக்காட்டியிருந்தார்கள். அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

உண்மையே கடவுள்

10-08-92 — நிறுவனர்

௭—

# நெசவுத் தொழிலை ஊக்குவிப்போம்

எங்களுக்கு உடை மிகவும் முக்கியமாக விளங்குகிறது. ஆரம்பத்தில் ஆதி மனிதர்கள் விலங்கின் தோல், இலை குழைகளை பின்னி அணிந்தனர். நாளடைவில் பருத்திப் பஞ்சு, பட்டு, உரோமம் முதலியவற்றால் ஆடைகளை நெசவு செய்து அணியக் கற்றுக்கொண்டனர்.

நெசவுத் தொழிலாளர்கள் நெசவு செய்யாவிட்டால் நாங்கள் உடைகள் அணிய முடியாது. மனிதனின் அடிப் படைத் தேவையில் உடை முதலாவதாக விளங்குகிறது. ஆரம்பத்தில் கைத்தறிகள் மூலம் சிறிய அளவில் துணிகளை உற்பத்தி செய்தனர். நாளடைவில் தொழில்நுட்பத்துறை வளர்ச்சி உண்டாகியது.

இன்று கைத்தறிகளும், மின்விசை எந்திரங்களும் துணி களை அதிகளவில் உற்பத்தி செய்கின்றன. ஆடையில்லா தவன் அரை மனிதன் என்பது ஆன்றோர் வாக்கு. நாங் கள் பருத்தியை விரும்பி அணிகிறோம். பருத்தி உடைகள் வியர்வையை உறிஞ்சக் கூடியன. நைலோன், எதலோன் முதலியவற்றால் ஆக்கப்படும் உடைகள் வியர்வையை உறிஞ்சுவதில்லை. அதனால் உடல் நலம் பாதிக்கப்படு கின்றது.

அவற்றில் நெருப்பு பற்றக்கூடிய தன்மையுண்டு அத னால் தீமை ஏற்படுகிறது. இன்று உடையின் தேவை விஞ் ஞான அடிப்படையில் நோக்கப்படுகிறது. ''கந்தையானா லும் கசக்கிக் கட்டு'' என்பது ஒரு பழமொழி.

நெசவுத் தொழிலுக்கு கைராட்டினம், வடிக்கதிர் போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டன. நூல் நூற்கும் இயந்திரம் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப் பொழுது இயந்திரங்களினால் நூல் நூற்கப்படுகிறது. வடிப் பதற்கும் துணிகள் பயன்படுகிறது. நாங்கள் நெசவுத் தொழிலை நன்றாக ஊக்குவிக்க வேண்டும். நெசவுத் தொழிலினால் வேலை வாய்ப்பும் ஏற்படுகிறது.

—செல்வி கவிதா சிவபாலன்
கொற்றையூர்

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, உடுவில்.
(அங்கம்; 13-8-85)

# அறிவுப் போட்டி இல. - 1

## "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்"

அன்பார்ந்த மாணவ மணிகளே !

அறநெறிப் போட்டி இலக்கம் 1-க்கு நூற்றுக் கணக்கானோர் ஆர்வமுடன் பங்குபற்றி விடை எழுதியுள்ளீர்கள். இவர்களுள் பதின் எண்மர் திருப்தியாகவும், சரியாகவும் விடைகளைத் தந்துள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர்களுள் ஒருவர் சரியான விடை எழுதியிருந்தும் அவர் பெயர் விபரங்களை விடைத் தாளில் தர மறந்து விட்டார்.

ஆர்வமுடன் பங்குபற்றி போட்டியில் வெற்றி பெற்ற அன்புச் செல்வங்களின் பெயர்கள் இந்த இதழில் பிரசுரமாகியுள்ளது. வெற்றி பெற்ற அனைவருக்கும் ரூபா 100/- வீதம் பரிசில் தொகையாக வழங்கப் பெறுவதுடன் எமது இலவச வெளியீடுகளும் வழங்கப் பெறும்.

பரிசுக்குரியவர்கள் தங்கள் முழுப்பெயர் சரியான முகவரி என்பவற்றோடு எங்களுடன் தொடர்பு கொண்டு பரிசில்களைப் பெறுமாறு வேண்டிக் கொள்வதோடு, உங்கள் எழுத்துக்களையும் தெளிவாகவும், அழகாகவும் எழுதுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

விடை அனுப்பியவர்களில் பலரின் விடைகள் ஒரே ஆளினால் எழுதப் பெற்றவைகளாக உள்ளன. இது விரும்பத்தக்கதல்ல. எமது நோக்கம் இளம் செல்வங்கள் அனைவரும் அறிவைப் பெறவேண்டும் என்பதே. எனவே போட்டிக்கான விடைகளை உங்கள் கையெழுத்தால் எழுதி ஒப்பமிட்டு அனுப்பி வையுங்கள். "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்."

1-9-92 - திருவனர்

உ

# " அறம் வளர் இளந் தமிழ் "
## அறிவுப் போட்டி இல. - 1

இப் போட்டியின் சரியான விடைகள் :

1. தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்பெற்ற எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

விடை : 13, ணா, னா, ணோ. னோ, ணொ, னொ, ணை, னை, லை, ளை, றோ, றா, றொ.

2. விடை : சோவியத்யூனியன், ரஷ்சியக் குடியரசு

3. விடை : சுப்பிரமணிய பாரதியார்
ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி

4. விடை ; (அ) யாழ்ப்பாணக் குடாநாடு
(ஆ) சுண்ணாம்புக் கற்பாறை

5. விடை : (அ) 247 (ஆ) உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1

6. விடை ; (அ) மரினா ஆழி அல்லது மரியானா ஆழி
(ஆ) எவரெஸ்ட் சிகரம்

7. விடை : சிக்கனம், சமத்துவம், உடலுழைப்பு அல்லது அறிவு வளர்ச்சிப்பணி, ஊனமுற்றோர் உதவிப் பணி, கருமயோகப் பணி

8. விடை : நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

9. விடை : றொபேட் ஸ்ரீவின்சன் பேடன்பவல் பிரபு.
சமயக் கடமை, நாட்டுப் பற்று, உலக ஒற்றுமை, பிறர் சேவை, ஒழுக்கம், அரசியல் சார்பின்மை, செயல் திட்டங்கள்.

10. விடை ; 1981 ஆனி 1-ந் திகதி, சுமார் 97000 நூல்கள்

| பரிசில் பெறுவோர் பெயர் | விலாசம் |
|---|---|
| 1. க. கஜேந்திரன், | வட்டு கிழக்கு சித்தங்கேணி (யாழ். இந். கல்.) |
| 2. வி. சுஜாதா, | மணல் வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை |
| 3. வி. சுரேஷ், | மணல் வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை |
| 4. வி. சுபேஷ், | மணல் வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை |
| 5. வே. நந்தகுமார், | குதிரைவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை |
| 6. வி. விஜிதா, | குதிரைவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை |
| 7. கி. கந்தசோதி, | புலோலி மேற்கு, பருத்தித்துறை |
| 8. க. மருதாசன், | புலோலி மத்தி, பருத்தித்துறை. |
| 9. த. மஞ்சுளா | புலோலி மத்தி, பருததித்துறை. |
| 10. த. அஜந்தன், | ஆத்தியடி பருத்தித்துறை |
| 11. செ. காயத்திரி, | புலோலி மத்தி, பருத்தித்துறை |
| 12. க. த. சிறீனிவாசன், | தும்பளை, பருத்தித்துறை |
| 13. பு. ஈழநாதன், | அமெரிக்கமிசன் கல்லூரி, உடுப்பிட்டி |
| 14. உ. உத்ஜயனி, | நுணாவில் சந்தி, சாவகச்சேரி |
| 15. இ. சுகந்தினி, | சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் |
| 16. எஸ். ரவிசங்கர், | சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு |
| 17. ரி. அகிலன், | செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பு |
| 18. ஜே. யூட்நாதன், | சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு |

ள—

# அறிவுப் போட்டி - 2உ

01. இலங்கையின் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு? அதில் தமிழீழப் பகுதியின் நிலப்பரப்பு எவ்வளவு?

02. உலகின் முதல் பெண் பிரதமர் யார்? ஒரு பெண் தலைவர் தனது காலத்தில் தனது பெயரிலேயே ஒரு கட்சியை வழிநடத்தி, ஒரு நாட்டையே நிர்வகித்தார். அவர் யார்? அந்நாடு எது? அக்கட்சி எது?

03. எண்ணும் எழுத்தும் முக்கியமென ஔவையார், வள்ளுவர் கூறிய குறள் வாக்கியங்களைத் தருக.

04. பாரதியாருக்கு அடுத்ததாக இந்தியாவிலும், ஈழத்திலும் இரு கவிஞர்கள் தேசியப் பாடல்களை எழுதியும்,

விடுதலைப் போருடன் இணைந்தும் நின்றனர். அவர்கள் யார்? அவர்கள் எழுதிய ஒவ்வொரு நூல்களின் பெயர்களைத் தருக?

05. ஔவையார் அறம் செய்வதை முதலாவது செயலாகக் கூறிய நான்கு குறள் மொழி தருக.

06. யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஓடும் மூன்று ஆறுகள் எவை? பிரதான துறைமுகம் எது?

07. உலகப் பொதுமறை தந்தவர் எங்கு. இற்றைக்கு எத்தனை வருடங்களுக்கு முன் அவதரித்தார்? அவரது நூலில் எத்தனை பகுதிகள் உள்ளன? எத்தனை பாடல்கள் உள்ளன?

08 உலகத்தாரால் 'மேதைச் சிறுவன்' எனப் பாராட்டப்பட்ட இலங்கைச் சிறுவன் யார்? அவனது வயது என்ன?

09. "செந்தமிழ் நாடெனும் போதினிலே......",
"தமிழுக்கு அமுதென்று பெயர்" இவ்விரு புகழ் பெற்ற பாடல்களையும் பாடியவர்கள் யார்? அவர்களில் யார் யாருடைய குரு?

10. உலகச் சிறுவர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது? சிறுவர்களுக்கு உதவும் ஐக்கிய நாடுகள் நிறுவனம் எது?

இப் போட்டிக்கான விடைகளையும், சொல்லடுக்குப் போட்டி, புதிர் ஆகியவற்றின் விடைகளையும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதி 1992 - 10 - 31-ந் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

**விநாயகர் தரும நிதியம்**
புலோலி மேற்கு — பருத்தித்துறை.

அல்லது

**முத்தமிழ் மன்ற நூல் நிலையம்**
சுன்னாகம் தெற்கு — சுன்னாகம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பெறும்.

எ—

# சனசமூக நிலையங்களுக்கு ஒரு வேண்டுகோள்

எமது விநாயகர் தரும நிதியத்தின் பணிகளில் ஒன்றாகிய அறநெறிச் சிந்தனைகளை இளம் பராயத்தினரிடையே ஊட்டும் முயற்சி பற்றி இவ்விதழில் சிறிது விளக்க விரும்புவதுடன் சன சமூக நிலையங்கள் எவ்வாறு இப்பணிகளில் உதவ முடியும் என்பதையும் கூற விரும்புகின்றோம், அவற்றை நாம் வற்புறுத்தவில்லை. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

சென்ற வருடம் 1991ஆம் ஆண்டு அறநெறி வினைத்திறன் போட்டிப் பரீட்சையொன்றை 5ஆம் ஆண்டு மாணவ மாணவியரிடையே நடாத்தியிருந்தோம். இதற்கென அறநெறி மணிகள் என்னும் நூலில் 1200 பிரதிகள் பதிப்பித்து, இப் பிரதிகளை நேரில் கொண்டுபோய் எமது சுற்றாடலிலுள்ள 25 பாடசாலைகளுக்கு விநியோகித்து விண்ணப்பத்தை அனுப்பும்படி கேட்டிருந்தோம். 16 பாடசாலைகள் மட்டும் விண்ணப்பித்திருந்தன. இவற்றில் 11 பாடசாலைகள் பரீட்சைக்கு தகுதிபெற்று 10 பாடசாலைகள் தேர்வில் பங்கு கொண்டன. சிறப்பாக தேர்வு எழுதிய மாணவர்களுக்கு மொத்தப் பரிசாக ருபா 21,550/– சென்றவருட சரஸ்வதி பூசைத் தினத்தன்று வழங்கிக் கௌரவித்தோம். இதனைத் தொடர்ந்து எமது சிந்தனைகளில் இவ் அறநெறிக் கல்வி தமிழீழத்தில் உள்ள அனைத்து இளம் பராயத்தினருக்கும், குறிப்பாக 5–ம், 6–ம், 7–ம் ஆண்டு மாணவர்களுக்கு புகட்டப்பட வேண்டும் என்று தோன்றியது.

அதன் விளைவாக வகுப்புகளுக்கு ஏற்ற வகையில் ஆத்திசூடி. கொன்றைவேந்தன், வாக்குண்டாம், திருக்குறள், வெற்றிவேற்கை, நல்வழி, விவேகசிந்தாமணி போன்ற இன்னோரன்ன நீதி நூல்களை பாடத்திட்டமாக பதிப்பித்தும், தேர்வு பற்றிய விதிமுறைகளை விளக்கியும், கோட்டக் கல்வி அதிகாரிகளின் ஆதரவோடு யாழ். மாவட்டத்தில் உள்ள, எமக்கு முகவரிகள் தெரிந்த 160 பாடசாலைகளுக்கு வகுப்புகளுக்கு ஏற்றவகையில் இலவசமாக பிரதி

களை அனுப்பி வைத்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கேட்டிருந்தோம். வெளி மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா போன்ற இடங்களுக்கு தற்போதைய நாட்டு நிலைமைகளினால் ஏற்பட்ட தபால் போக்குவரத்து சீர்கேடு காரணமாக உரிய முறையில் செயல்பெற முடியவில்லை.

பருத்தித்துறை கல்விக்கோட்டப் பிரிவில் இருந்து 16 பாடசாலைகளும். மருதனாமடக் கல்விக்கோட்டப் பிரிவில் இருந்து 04 பாடசாலைகளும், பண்டத்தரிப்புக் கோட்டப்பிரிவில் இருந்து 02 பாடசாலைகளுமாக மொத்தம் 20 விண்ணப்பங்கள் மட்டுமே எமக்கு கிடைத்தன. இவ்விண்ணப்பங்களில் மொத்தம் 1492 விண்ணப்ப தாரிகள் அடங்கியிருந்தனர். விண்ணப்பங்கள் கிடைத்த பின்னர் விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு, எம்மிட'மிருந்த பிரதிகளில் மாணவர் தொகைக்கு ஏற்றவாறு நாலு மாணவர்களுக்கு 1 பிரதி வீதம் மேலதிக பிரதிகளை தேர்வுக்குத் தயாராகும் மாணவ மாணவிகளுக்கு சுற்று முறையில் படிக்கும் வகையில் பாடசாலைகளுக்கு கொண்டு சென்று கொடுத்தோம்.

அடுத்த பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு, அச்சிடப்பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதுடன் பரீட்சைத் திகதி குறித்து பாடசாலைகளுக்கு நேர காலத்துடன் அறிவித்து 18-07-1992-ல் தொண்டர்களை ஒழுங்கு செய்து, அவர்கள் மூலம் பரீட்சையை, அரசாங்கத்தால் நடாத்தப்பெறுகின்ற ஒரு பரீட்சை போன்று நடாத்தினோம்.

என்ன ஏமாற்றம்! பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்ப தாரிகளில் அரைவாசிப் பேர்தானும் பரீட்சைக்குத் தோற்றவில்லை. சில பாடசாலைகளில் தோற்றிய வீதம் மிகவும் குறைவாய் இருந்தது. இது நிற்க விடைத்தாள்களை நாம் புள்ளியிட்டுப் பார்த்த போது அனேக பிள்ளைகள் பெற்ற புள்ளிகள் பூச்சியமாகவும், மிகவும் குறைந்த புள்ளிகளாகவும் இருந்ததைக் கண்டோம். இதன் மூலம் பிள்ளைகளுக்கு உரியவாறு இவ் அறநெறிப் பாடத் திட்டங்கள் கற்பிக்கப் பெறவில்லை என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இப்பாடத்தை சிறுவர்களுக்கு கற்பிப்பது எமது கடமை என்ற உணர்விலேயன்றி வேறு எவ்வித பிரதிப்

பிரயோசனத்தையும் நாம் கருதவில்லை. அறம் இன்றி எதுவுமில்லை. இன்றைய சமுதாயத்திற்கு இவை முக்கியமானதெனத் தெரியவில்லை.

இந்நிகழ்வுகளால், இத்தேர்வு எமக்குப் பெரிய ஏமாற்றத்தையும், சில படிப்பினைகளையும் பெற்றுத் தந்துள்ளது. அறநெறிப் பண்பாடு கற்காத சமுதாயத்தையிட்டு நன்றாக உணர்ந்து கொண்டோம். இதனடிப்படையில் வரும் காலத்தில் அறநெறிக் கருத்துக்களை, கிராம இளம் பராயத்தினருக்கு சனசமூக நிலையங்களூடாகக் கற்பித்தல் நலமென எண்ணுகின்றோம். எமது வெளியீடுகளில் வெளியாகும் அறநெறிப் பகுதிகளை சனசமூக நிலையங்கள் வாரந்தோறும் ஒவ்வொரு மணித்தியாலம் இத்துறைகளில் ஈடுபாடுள்ளவர்களைக் கொண்டு இளம் பிராயத்தினருக்கு கற்பித்து வரின் அறநெறி அறிவு வளர்ந்து பெரும்பயன் விளையும் என்பதோடு சஞ்சிகைகள் மூலம் எம்மால் நடாத்தவிருக்கும் போட்டிகளில் அவர்கள் விடையளிக்க இலகுவாக இருக்கும் என்று நம்புகின்றோம். மாதத்தில் நாலு மணித்தியாலம் கற்பிக்கும் சனசமூக நிலையங்கட்கு சிறு உதவிகளை வழங்கவும் எண்ணியுள்ளோம். ஆனால் செயலுக்குரிய பலன் கிடைக்குமா என்பது சந்தேகத்திற்கு உரியதாயே உள்ளது. உண்மைதான் கடவுள் என்பது எவருக்கும் புலப்படவில்லை. சிறு பராயம் தவறினால் அறநெறி அறிவை வளர்க்கமுடியாது.

கிராம மட்டத்தில் நற்பிரசைகளை உருவாக்கும் பொறுப்பு சனசமூக நிலையங்களைச் சார்ந்ததே என்ற வகையில் இப்பணி சிறப்பாக இருக்கும் என நம்புகிறோம். எனவே சனசமூக நிலைய நிர்வாகிகள் தங்கள் சனசமூக நிலையங்களை எங்கள் நிலையத்தில் பதிவுசெய்து ஏழு (7) பிரதிகளைப்பெற்று சுழற்சி முறையில் மாணவ மாணவிகளிடையே விநியோகம் செய்து, கற்பித்து உங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

எனவே இப்பணியில் சனசமூக நிலையங்கள் எம்மை ஊக்குவிப்பதோடு நல்லதொரு சமுதாயம் மலர உதவவேண்டுமென அன்போடும், பண்போடும், பணிவோடும் இருகரம் கூப்பி வேண்டுகின்றோம். நன்றி.

— நிறுவனர் —

1-9-92

# விநாயகர் தரும நிதியம் நடாத்திய அறநெறித் தேர்வுப் பரீட்சையில் பரிசில்கள் பெறும் மாணவர்கள் விபரம்

(ஆரம்பம் : 10-8-35)

(குரு) — ள — குரு வணக்கம்

**திக்கம் சித்திவிநாயகர் வித்தியாசாலை : 14 க்கு 14 மாணவர்கள் தோற்றினர்.**

வி. நிரஞ்சினி 1–ம் பரிசு
செ. சுதாகரன் 2–ம் பரிசு
ம துஷ்யந்தன் (குரு) 3–ம் பரிசு
ம. தாரணி 1–ம் பரிசு
தா. மயூரன் 2–ம் பரிசு
சி. இலம்போதரன் 2–ம் பரிசு
க. தாட்சாயினி 3–ம் பரிசு

**வட இந்து ம. கல்லூரி, பருத்தித்துறை : 330 க்கு 46 மாணவர்கள் தோற்றினர்.**

இ. விஜயகலா (குரு) 1–ம் பரிசு
தி. தாரணி (குரு) 2–ம் பரிசு
ம. நர்மதா (குரு) 3–ம் பரிசு
பு. ரோகினி (குரு) 3–ம் பரிசு
பா. மாதங்கி 1–ம் பரிசு
அ. நளாயினி 1–ம் பரிசு
சா. பிரிந்தா (குரு) 2–ம் பரிசு
தி. நர்மினி (குரு) 1–ம் பரிசு
பா. சோபனா (குரு) 2–ம் பரிசு
செ. நளாயினி (குரு) 3–ம் பரிசு
ப. கல்யாணி (குரு) 3–ம் பரிசு
த. தேனுகா (குரு) 1–ம் பரிசு
சி. தினேசா (குரு) 2–ம் பரிசு
த. யாழினி 3–ம் பரிசு
க. சுபாசினி (குரு) 2–ம் பரிசு
த. சுஜிதா (குரு) 3–ம் பரிசு
கு. சைலசா 3–ம் பரிசு
ஞா. செல்வந்தினி 3–ம் பரிசு
இ. இளவரசி (குரு) 1–ம் பரிசு
த. மாதங்கி (குரு) 2–ம் பரிசு

**மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி பருத்தித்துறை : 250 க்கு 95 மாணவர்கள் தோற்றினர்**

சி. சிவகலா 1–ம் பரிசு
ஐ. யசோதா 1–ம் பரிசு
சி. சிவசினி (குரு) 2–ம் பரிசு
வே. சுகந்தி (குரு) 1–ம் பரிசு
பா. ஸ்ரீதேவி 1–ம் பரிசு
வே. வாசுகி 1–ம் பரிசு
ஆ. சங்கீதா (குரு) 1–ம் பரிசு

வி. சசிரோகா (குரு) 1–ம் பரிசு
பா. கேமமாலா 2–ம் பரிசு
சி. ஸ்ரீகௌசலா 2–ம் பரிசு
த. கோமதி (குரு) 2–ம் பரிசு
ந. சிவதர்சினி 3–ம் பரிசு
இ. கனிதா 3–ம் பரிசு
சு. டெனிசியா 3–ம் ட ரிசு
அ. தேவகி 3–ம் பரிசு
செ. பஞ்சகல்யாணி 2–ம் பரிசு
ம. ஜெயகலா 3–ம் பரிசு
கு. சோதிலக்குமி 3–ம் பரிசு
சி. சிவசக்தி 3–ம் பரிசு
அ. மாலினி 3–ம் பரிசு

பா. சுதர்சினி (குரு) 2-ம் பரிசு
கு. பிரியா 2–ம் பரிசு
சி. மீரா (குரு) 2–ம் பரிசு
செ. வாசுகி 2–ம் பரிசு
நா. நிசாலினி (குரு) 3–ம் பரிசு
த. சுகன்யா (குரு) 3–ம் பரிசு
க. துர்க்கா 3–ம் பரிசு
சி ரஞ்சனா 1–ம் பரிசு
கி. கிரிசாந்தி 2–ம் பரிசு
மு. ராதை 3–ம் பரிசு
ச. கார்த்திகா 3–ம் பரிசு
கி. தாரணி 3–ம் பரிசு

க. நர்மதா (குரு) 2–ம் பரிசு
வி. விசயரதி 2–ம் பரிசு
தோ. ஜரினசமிலா (குரு) 2–ம் பரிசு
ப. ராதிகா 2–ம் பரிசு
தி. சந்திரிகா 3–ம் பரிசு
சி. கார்த்திகாயினி 3–ம் பரிசு
சி. அனுஷா (குரு) 3–ம் பரிசு
பூ. சுதர்சியா 1–ம் பரிசு
சி. மாலினி 3–ம் பரிசு
அ. க. பமிலா 3–ம் பரிசு
கு. சுதா 3–ம் பரிசு
கு. துஷ்யந்தி 3–ம் பரிசு

**தம்பசிட்டி மெ. மி. த. க. பாடசாலை பருத்தித்துறை : 105 க்கு 75 மாணவர்கள் தோற்றினர்**

வே. சர்மலி (குரு) 1–ம் பரிசு
பா. நக்கீரன் (குரு) 2–ம் பரிசு
செ. மாலதி (குரு) 3–ம் பரிசு
சி. சிவாகரன் 2–ம் பரிசு
யோ. சுபாசினி 3–ம் பரிசு
க. தனுஷா 3–ம் பரிசு
வே. தர்மினி 3–ம் பரிசு

**புலோலி கிழக்கு அ. த. பாடசாலை புலோலி : 15 க்கு 15 மாணவர்கள் தோற்றினர்**

வே. தேவமனோகரி 1–ம் பரிசு
ப. விசயமனோகரி 2ம் பரிசு
யோ. துஜிதா (குரு) 2–ம் பரிசு

**மணற்காடு றோ. க. த. க. பாடசாலை குடத்தனை ; 75 க்கு 23 மாணவர்கள் தோற்றினர்**

வே. மரிஜந்தினி (குரு) 2–ம் பரிசு
றோ. அன்ரனிஸ்ரா யூலியஸ் (குரு) 3–ம் பரிசு

**ஏழாலை சைவ சன் மார்க்க வித். ஏழாலை : 115 க்கு 59 மாணவர்கள் தோற்றினர்.**

சி. சிவரஞ்சினி (குரு) 1–ம் பரிசு
தி. ஜெனோதா 2–ம் பரிசு
இ. தமிழினி 2–ம் பரிசு
பொ. துர்க்காதரன் 2–ம் பரிசு
செ. திஷானி (குரு) 2–ம் பரிசு
ம. ஐங்கரன் (குரு) 2–ம் பரிசு
இ. ஜனாத்தனன் (குரு) 3–ம் பரிசு
சி. சர்வகுமார் 3–ம் பரிசு
மு. விசிதா 3–ம் பரிசு
க. சியாளினி 3–ம் பரிசு
இ. ஜெகன் 3–ம் பரிசு

க. பார்த்தீபன் 1–ம் பரிசு
க. பரணிதரன் 2–ம் பரிசு
சி. கலைச்செல்வன் (குரு) 2ம்பரிசு
சி. சர்மிலி 2–ம் பரிசு
பா. முராரி 2–ம் பரிசு
ந. செந்தில்குமார் 2–ம் பரிசு
செ. சுலேக்கா (குரு) 3–ம் பரிசு
கு. குணதீபன் (குரு) 3–ம் பரிசு
உ. நிசாந்தினி 3–ம் பரிசு
பா. மதிவதனி (குரு) 3–ம் பரிசு

ப. ஸ்ராலின் 1–ம் பரிசு
ச. சத்தியா (குரு) 2–ம் பரிசு
வே. விஜிதா 2–ம் பரிசு
த. தமிழ்வாணி 2–ம் பரிசு
சி. தயாழினி 2–ம் பரிசு
சி. சிவகரன் 2–ம் பரிசு
க. நிருபா 3–ம் பரிசு
சி. சதிசுகன்யா 3–ம் பரிசு
அ. பிரியதர்சினி 3–ம் பரிசு
சி. மதனரூபி (குரு) 3–ம் பரிசு

**அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை அச்சுவேலி : 114 க்கு 64 மாணவர்கள் தோற்றினர்.**

வ. அனுலா 2–ம் பரிசு
நா. சங்கீதா 2–ம் பரிசு
பா. சஞ்சீவன் 2–ம் பரிசு
அ. மகிந்தன் 3–ம் பரிசு
செ. டிலானி 3–ம் பரிசு
கு. தாட்சாயினி 3–ம் பரிசு
அ. விசயபாஸ்கர் 3–ம் பரிசு
சா. கோகிலவதனி 3–ம் பரிசு

ஞா. கிருத்திகா 2–ம் பரிசு
சி. ஆனந்தரஞ்சினி 2–ம் பரிசு
பா. வாகீசன் 3–ம் பரிசு
சு. சுயாந்தி 3–ம் பரிசு
கு. கஸ்தூரி 3–ம் பரிசு
கு. பிரிந்தினி 3–ம் பரிசு
ஞா. ரமேஸ்குமார் 3-4ம் பரிசு

அ. பத்மினி 2–ம் பரிசு
சி. பிரசன்னா 2–ம் பரிசு
இ. கஜிந்தா 3-ம் பரிசு
அ. பத்மராகினி 3–ம் பரிசு
ஆ. தக்சாயினி 2–ம் பரிசு
செ ஸ்ரீகாந் 3–ம் பரிசு
மு. சுசேந்தினி 3–ம் பரிசு

**சங்கானை சைவப் பிரகாச வித்தியாசாலை : 9 க்கு 6 மாணவர்கள் தோற்றினர்**

ர. கஜேந்திரன் 3–ம் பரிசு

**திருஞானசம்பந்தர் வித்தியாசாலை சுன்னாகம் :** 10 க்கு 9 மாணவர்கள் தோற்றினர்.

க, தனஞ்செயன் 3-ம் பரிசு    ச. அனிதா 3-ம் பரிசு

**தெல்லிப்பளை சை. பி. வித்தியாசாலை சுன்னாகம் :** 0    37 க்கு 13 மாணவர்கள் தோற்றினர்

**சித்தங்கேணி கணேச வித்தியாசாலை பண்டத்தரிப்பு :** 0    40 க்கு 33 மாணவர்கள் தோற்றினர்

**கற்கோவளம் மெ. மி. த. க. பாடசாலை பருத்தித்துறை ;** 55 க்கு 38 மாணவர்கள் தோற்றினர்

யோ. புவனமதி 1-ம் பரிசு    க. பார்மிலா 2-ம் பரிசு    அ. சுகுணா 2-ம் பரிசு
கி. மைதிலி 2-ம் பரிசு    ஆ. நந்தகுமார் 3-ம் பரிசு    இ அருள்சர்மிலா 3-ம் பரிசு

**மணியகாரன் தோட்டம் த. வித். கரவெட்டி :** 56 க்கு 56 மாணவர்கள் தோற்றினர்

த. நித்தியா (குரு) 2-ம் பரிசு    ம. மயூரன் (குரு) 2-ம் பரிசு    சு. சுகந்தின் (குரு) 2-ம் பரிசு
கா. தாட்சாயினி (குரு) 2-ம் பரிசு    க. சுதர்சினி (குரு) 2-ம் பரிசு    ப. அனுஷா 3-ம் பரிசு
தி. யுவனமதி (குரு) 3-ம் பரிசு    செ. குலேந்திரன் 3-ம் பரிசு

**மேலைப்புலோலி சை.பி. வித்தியாசாலை புலோலி மேற்கு:** 45 க்கு 25 மாணவர் தோற்றினர்

இ. இரவிதரன் (குரு) 1-ம் பரிசு    செ. சங்கீதா (குரு) 2-ம் பரிசு    க. குகேந்திரா (குரு) 2-ம் பரிசு
கு. ஜெகதீஸ் (குரு) 3-ம் பரிசு    நா கீதாஞ்சலி (குரு) 3-ம் பரிசு    ச. நிஷாந்தினிதேவி(குரு) 3-ம் பரிசு
ஸ்ரீ. கோபிநாத் (குரு) 3-ம் பரிசு    ச. வினோதினி (குரு) 3-ம் பரிசு    பா. சுதர்சினி (குரு) 1-ம் பரிசு
இ. பாமினி (குரு) 2-ம் பரிசு    வ. வசந்தலோசினி (குரு) 2-ம் பரிசு    சி. தயாளினி (குரு) 3-ம் பரிசு
இ. வாணி (குரு) 3-ம் பரிசு    சி. குலேந்திரன் (குரு) 3-ம் பரிசு

**தட்டாதெரு மெ. மி. த. க. பாடசாலை பருத்தித்துறை :** 12 க்கு 10 மாணவர் தேற்றினர்

இ. சுலோசனா 2-ம் பரிசு    தெ. சுஜிதா 3-ம் பரிசு    சொ. சுஜித்கண்ணா 3-ம் பரிசு

**குடத்தனை அ. மி. த. க. பாடசாலை குடத்தனை : 53-க்கு 42 மாணவர் தோற்றினர்.**

த. சுதர்சினி (குரு) 3-ம் பரிசு
ஞா. பிரதீபன் (குரு) 3-ம் வகுப்பு
சி. ஸ்ரீஜெயதேவி 1-ம் பரிசு
த. உஷாநந்தினி 2-ம் பரிசு
இ. நித்தியராஜ் 2-ம் பரிசு
கி. பிரபாநந்தினி (குரு) 2-ம் பரிசு
க. சுகந்தி (குரு) 3-ம் பரிசு
தே. ராதிகா (குரு) 1-ம் பரிசு

**அல்வாய் அம்பாள் வித்தியாலயம் அல்வாய் : 54-க்கு 36 மாணவர் தோற்றினர்.**

தி. பராசக்தி (குரு) 2-ம் பரிசு
ப. சுபாசினி (குரு) 2-ம் பரிசு
ப. யாழினி 3-ம் பரிசு
அ. அசோக் (குரு) 3-ம் பரிசு
பா. ரேணுகாதேவி (குரு) 3-ம் பரிசு
நா. புனிதகுமாரி 3ம் பரிசு
சி. சுஜேந்தினி (குரு) 3-ம் பரிசு
ஆ. சத்தியானந்தம் (குரு) 3-ம் பரிசு

**அல்வாய் வட. றோ. க. த. க. பாடசாலை அல்வாய்: 103-க்கு 66 மாணவர் தோற்றினர்.**

ச. குயின்ரன் (குரு) 2-ம் பரிசு
த. நிசாந்தினி (குரு) 2-ம் பரிசு
ம. முகுந்தன் (குரு) 3-ம் பரிசு
ப. நர்மதா (குரு) 3-ம் பரிசு
தே. தேவச்சந்திரன் (குரு) 3-ம் பரிசு
ச. ஜோன்சன் (குரு) 3-ம் பரிசு
பெ. நெச்சன் பெர்னாண்டோ (குரு) 3-ம் பரிசு

வடமராட்சிப் பகுதி மாணவர்களுக்குரிய பரிசில்கள் 4-10-92 இல் சரஸ்வதி பூசை தினத்தன்று அந்த அந்தப் பாடசாலைகளில் வைத்து வழங்கப்பெறும்.

வலிகாமம் பகுதியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்ற நூலகத்தினர் (5-10-1992) விஜயதசமி தினத்தன்று பரிசில்களை வழங்குவர் அப்பகுதி மாணவர்கள் அங்கு சென்று பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

௲

# நன் மார்க்க வழிகள்

ஒருவர் இளமையில் அனுபவித்த சிக்கன வாழ்வு மூலமே இந்நூல் தங்கள் கைகளில் மிளிர்கிறது என்ற நினைப்பை வளர்ப்பாயாக.

பாடசாலைகளிலுள்ள மேசை, கதிரைகளையும் பக்கு வமாய் பாவிப்பாயாக.

பாடசாலைத் தளபாடங்களை அழுக்கேறா வண்ணம் காப்பாற்றுவாயாக.

உனது உடைகள் அத் தளபாடத்திலுள்ள ஆணிகளில் சிக்கி கிழியாவண்ணம் கவனமாய் நடந்து கொள்வாயாக.

பாடசாலையில் நீ கற்கும் பாடங்களில் பிழைகள் நேர்ந் தால் உண்மையை ஒப்புக்கொண்டு மகிழ்வுடன் அதற்குரிய தண்டனையைப் பெறுவாயாக.

உன்னோடு கல்வி பயிலும் அனைவரையும் ஒன்றாக மதித்து வேற்றுமை எண்ணம் வளராது நடப்பாயாக.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நல்வாக்கை நீயும் உனது வாழ்க்கையில் கடைப்பிடிப்பாயாக.

சாதிகள் இல்லையடி பாப்பா என்பதை ஏற்று நடப் பாயாக.

உன்னைப்போல் மற்றவர்களையும் நேசிப்பாயாக.

குல உயர்வு தாழ்வு பேசுதல் வீழ்ச்சி என்பதை உணர்வாயாக.

வர்க்க பேதங்களை வளர்ப்பதை தவிர்ப்பாயாக.

தாழ்வு மனப்பான்மையை அகற்றி உள்ளத்தில் தைரி யமும் நம்பிக்கையும் கொள்வாயாக.

செய்யும் தொழிலில் சமத்துவ நோக்கத்தை எண்ணு வாயாக.

சிவபெருமான் கூடையில் மண்சுமந்ததை அறிவாயாக.

உனது உயிர்போல் மற்றைய உயிரினங்கள்மீது இரங்கி வாழ்வாயாக.

# கேள்வி / பதில்

**கேள்வி:** மனிதனுக்கும் மற்றவைக்கும் மறுபிறப்பு உண்டா?


மு. தயாநிதி ஆண்டு -12
கம்பர்மலை.

**பதில்** : சகல உயிரினங்களும் மறுபிறவி எடுத்து வந்த காரணத்தினாலேதான் மிருக இனமான குரங்கிலிருந்து மனித இனம் தோன்றியது. சூரன் கொடுங்கோன்மை செய்த காரணத்தினால் அதற்குரிய பூத அணுக்கள் கூடி நற்பிறவிக்குரிய பூத அணுக்கள் குறைந்து அவ்வாறமைந்த அணுவுக்குரிய பிறப்பான சேவலும் மயிலுமாக மறுபிறப்பு பிறந்துள்ளான். நாலு தலையுள்ள பிரமதேவன் முடி தேடும் படலத்தில் காணாதமுடியைக் கண்டேன் என்று பொய் சொன்ன காரணத்தால் ஐந்து பூத விகிதாசாரம் மாறியமைந்து மூன்று தலையுள்ள பிரமாவாக மாறியுள்ளார். கடும் உடலுழைப்புள்ள சிலந்தி வினைப்பயனால் ஐந்து பூத அணுக்கள் உயர்நிலைக்கு அமைந்து மாவலி அரசனாகப் பிறந்துள்ளது. ஒவ்வொரு ஆன்மாவும் செய்யும் (தொழில்) வினைக்கேற்ப ஐந்து பூத விகிதாசாரம் கூடிக் குறைந்து, அவ்வாறமைந்த ஐந்து பூத அணுக் கூறுக்கேற்பவே மறுபிறப்பு அமைகிறது, ஆகவே பிறப்பை அறுப்பதற்குரிய ஐந்து பூத சேர்க்கை அமைந்தால் மட்டுமே ஆன்மா பிறப்பு இல்லாது ஞான ஒளியுடன் இரண்டறக் கலக்க முடியும். இவற்றின் விபரங்கள் 'அறத்தமிழ் ஞானத்தில்' வெளிவர உள்ளன.

நீங்கள் அனுப்பும் அறநெறிக் கேள்விகளுக்கு
விநாயகர் தருமநிதிய நிறுவனர் அநுபவரீதியாக
பதில்களைத் தரக் காத்திருக்கின்றார்.

**கேள்விகள் அனுப்பவேண்டிய முகவரி:**
நிறுவனர்,
**கேள்வி / பதில்**
விநாயகர் தருமநிதியம்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

# வழிகாட்டுங்கள்



இந்த முயல் குட்டிக்கு நல்ல பசி. அது கரட் சாப்பிடுவதற்கு விரும்புகிறது. ஆனால் அதற்கு வழி தெரியவில்லை. எங்கே அதற்கு வழி காட்டுங்கள் பார்க்கலாம்.

இச் சஞ்சிகை புலோலி மேற்கு பருத்தித்துறை விநாயகர் தரும நிதியத்தினருக்காக உடுப்பிட்டி ஸ்ரீ வாணி அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.